வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු








Email : news@eelanadu.lk | மலர் : 04 | 20.07.2023 வியாழக்கிழமை | இதழ் : 223 | பக்கங்கள் : 16


வெள்ளி, ஞாயிறு தினங்களில்

## பிரத்தியேக வகுப்புகளை நடத்தினால் நடவடிக்கை!

யாழ். அரச அதிபர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ். மாவடத்தில் வெள்ளி, ஞாயிறு தினங்களில் தனியார் வகுப்புகள் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், பிரத்தியேக வகுப்புகள் நடைபெறுகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. எனவே, விதிகளை மீறி நடப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

தனியார் கல்வி நிலைய உரிமையாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் இந்தத் 15

## ராஜீவ் அறிமுகம் செய்தபோதிருந்த 13ஐ மாறாமல் நடைமுறைப்படுத்துங்கள்!



தமிழக காங்கிரஸ் வலியுறுத்து

சென்னை, ஜூலை 20

இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களுக்கு அதிகாரம் வழங்கும் வகையில் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை தமிழர்களுக்காக போராடி பெறப்பட்ட 13ஆவது சட்டத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும் - என்று காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு குழு வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், 13 குறித்த கோரிக்கை மீண்டும் வலுப்பெற்று வருகின்றது. ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த போது இலங்கைத் தமிழர்களுக்காக பெற்றுத் தந்த உரிமைகள் அனைத்தும் பிரதமர் மோடி ஆட்சிக் காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக சிதைக்கப்பட்டு வருகிறது என்றும் காங்கிரஸ் தமிழக தலைவர் கே. எஸ். அழகிரி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் உருவானதன் பின்னணியை நினைவு கூர்ந்த அவர், இந்த உடன்படிக்கையின் மூலமாக 13ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டது. 15

# ரணில் விக்கிரமசிங்க தமிழரை ஏமாற்றுகிறார்!

தென்னிலங்கை கட்சிகள் கூறுகின்றன

கொழும்பு, ஜூலை 20

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களை ஏமாற்றுகிறார். அவர் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு தரமாட்டார். அவரிடம் தீர்வை எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது என்று எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) ஆகிய கட்சிகள் தெரிவித்துள்ளன. 15

## விரும்பிய தீர்வை குறுக்குவழியில் பெற சம்பந்தன் குழு முயல்கிறது!

அமைச்சரவை பேச்சாளர் பந்துல



கொழும்பு, ஜூலை 20

தாங்கள் விரும்பும் தீர்வை ஜனாதிபதியிடம் குறுக்குவழியில் தட்டிப் பறிக்கலாம் என்று சம்பந்தன் தலைமையிலான குழுவினர் முயல்கின்றனர் என்று போக்குவரத்து துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்துடன், இந்தியாவை வைத்து இலங்கையை மிரட்டலாம் என்றும் சம்பந்தன் குழுவினர் எண்ணுகின்ற னர் என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி - தமிழ்த் தேசியக் 15

## ஊழல் தடை சட்ட திருத்தம் நிறைவேறியது

கொழும்பு,ஜூலை 20

ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் 190 திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

நேற்று நடந்த சட்ட மூலத்தின் குழு நிலையின் போது நீதி அமைச்சரால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களுடன் எதிர்க்கட்சியால் முன்வைக்கப்பட்ட சில திருத்தங்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவால் 2023 ஏப்ரல் 27 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த சட்ட மூலத்தின் 15

## 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த அனைத்து கட்சி ஆதரவு தேவையில்லை

இரா. சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 20

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நினைத்தால் 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தி நாம் கோரும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்க முடியும். 13ஐ நடைமுறைப்படுத்த அவருக்கு அனைத்துக் கட்சிகளின் ஆதரவும் தேவையில்லை. அவர் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர். பாராளுமன்றத்தின் பெரும் பான்மை பலத்துடனேயே பதவியில் இருக்கிறார்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை தமிழரசு கட்சியின் பெருந்



தலைவர் இரா. சம்பந்தன் எம். பி. நேற்று முன்தினம் ஜனாதிபதியுடனான 15

## ஜூலை 28 வரையே உயர்தர பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்!

கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 20

2023 கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சைக்கான இணையவழி விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான காலம் எதிர்வரும் 28ஆம் திகதியுடன் நிறைவடைகிறது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 27ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதேவேளை, 2022 உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் அடுத்த மாதம் நடுப்பகுதியில் வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த முன்னதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அதிகரித்த மது பாவனையால் நரம்பியல் நோய்கள் உயர்வு!

மருத்துவ நிபுணர் அஜந்தா எச்சரிக்கை




யாழ்ப்பாணம், ஜூலை 20

அதிகரித்த மது பாவனையாலேயே வடக்கில் நரம்பியல்சார் நோய்தாக்கம் அதிகரித்துள்ளது என்று யாழ். போதனா மருத்துவமனையின் நரம்பியல் மருத்துவ நிபுணர் அஜந்தா கேசவராஜா தெரிவித்துள்ளார். 15

## ஜி. எஸ். பி. பிளஸ் வரி சலுகையை இலங்கைக்கு 4 ஆண்டுகள் நீடிப்பு

பிரசெல்ஸ், ஜூலை 20

இலங்கைக்கு ஜி. எஸ். பி. பிளஸ் வரிச் சலுகையை 2027 டிசெம்பர் 31ஆம் திகதி வரை 4 வருட காலத் துக்கு நீடிக்க ஐரோப் பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது.



இந்த வரிச்சலுகை இந்த வருடம் டிசெம்பர் 31ஆம் திகதி நிறைவடைகிறது. இந்த நிலையில், புதிய ஜி. எஸ். பி. பிளஸ் வரிச்சலுகை தொடர்பான கலந்துரையாடல் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதன்போது, இலங்கை போன்ற நாடுகள் முன்னுரிமை தீர்வை - வரி சலுகைகளை 15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# கோதுமை மா விலையை அரசு குறைக்காதது ஏன்?

## அநுரகுமார திஸநாயக்கா கேள்வி

கொழும்பு, ஜூலை 20

உலக சந்தையில் கோதுமை மாவின் விலை சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் கோதுமை மாவின் விலையை அரசாங்கம் ஏன் குறைக்கவில்லை. அத்துடன் இரு பிரதான நிறுவனங்களுக்கு மாத்திரம் கோதுமை மா விநியோகத்தில் தனியுரிமை வழங்கப்பட்டுள்ளமை முறையற்றது என்று ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே மேற்படி கூறினர்.

மேலும், நாடளாவிய ரீதியில் 6 ஆயிரத்துக்கும் அதிகமான வெதுப்பகங்கள் காணப்படுகின்றன. இவற்றில் 5 இலட்சத்துக்கும் அதிகமானோர் தொழில் புரிகிறார்கள். பெருந்தோட்ட மக்கள் உட்பட பெரும்பாலானவர்கள் மாவில் தயாரிக்கப்படும் உணவு பொருட்களை பிரதான உணவாக உட்கொள்கிறார்கள். ஆகவே, நாட்டின் பிரதான உணவு பொருள் மூலமாக கோதுமை மா காணப்படுகிறது.

இவ்வாறான பின்னணியில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் கோதுமை மா இறக்குமதி செய்வதற்கான தடை விதிக்கப்பட்டு அதற்கான வர்த்தமானி 2023.06.14 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டாளரும் இறக்குமதி தொடர்பில் உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நாட்டில் கோதுமை இறக்குமதி மற்றும் விநியோகத்தில் பிறீமா, செரண்டிப் ஆகிய நிறுவனங்கள் முன்னிலை வகிக்கின்றன. இவ்விரு நிறுவனங்களும் கோதுமை தானியத்தை இறக்குமதி செய்து அவற்றை மாவாக்கி பின்னர் விநியோகிக்கின்றன.

தற்போதைய விலைக்கு அமைய சந்தையில் ஒரு கிலோகிராம் கோதுமை மா 210 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் கோதுமை தானியத்தை இறக்குமதி செய்யும் பிரதான இரு நிறுவனங்களும் ஒரு கிலோகிராம் கோதுமை தானியத்துக்கு மூன்று ரூபாய் வரி செலுத்துகிறது.

உலக சந்தையில் தற்போது கோதுமை மா மற்றும் கோதுமை தானியத்தின் விலை சடுதியாக குறைவடைந்துள்ளது. துருக்கி நாட்டில் இருந்து கோதுமை மா இறக்குமதி செய்தால் ஒருகிலோ கிராம் கோதுமை மாவின் விலையை 110 ரூபாயாக நிர்ணயிக்கலாம்.

உலக சந்தையில் கோதுமை தானியத்தின் விலை குறைப்பு, டொலரின் பெறுமதி வீழ்ச்சி, ரூபாயின் பெறுமதி உயர்வு ஆகிய காரணிகளால் கோதுமை தானியத்தை இறக்குமதி செய்யும் இவ்விரு நிறுவனங்களும் அதிக இலாபம் அடைகின்றன. இந்த நிறுவனங்கள் செலுத்தும் இறக்குமதி வரிகளுக்கும் தற்போது விலக்கு வழங்கப்பட்டுள்ளது.

அனுமதி பத்திரம் இல்லாத தரப்பினர் கோதுமை மா இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டுள்ளதால் இந்த இரு நிறுவனங்களும் கோதுமை மா விநியோகத்தில் தனியுரிமை செலுத்துகின்றன. இது முறையற்றதாகும். கோதுமை மா விலைக் குறைப்பின் நிவாரணத்தை இந்த நிறுவனங்கள் நுகர்வோருக்கு வழங்கவில்லை. இது தொடர்பில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

# இப்படியும் நடக்கிறது

கடந்த பல வாரங்களாக இந்தப் பத்தியை எழுத விருப்பம் வரவில்லை. அதற்குக் காரணம் எழுதுவதற்கு விடயங்கள் இல்லை என்பதல்ல.

பலரும் இதுதொடர்பாக தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தனர். அண்மையில், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பத்திரிகையை வாங்கியதும் இரண்டாம் பக்கத்தை திறந்து பார்த்துவிட்டு ஏமாற்றத்துடன் அன்றைய பொழுதைத் தொடங்க வேண்டியிருக்கின்றது என்று அங்கலாய்த்துக்கொண்டார்.

கனடாவிலிருந்து நண்பர் ஜெகதீசனோ, “ஈழநாடு உயர உயர பறந்தாலும் ஊர்க்குருவி ஆகமுடியாது“ என்று குறுந்தகவல் அனுப்பியிருந்தார்.

நாட்டில் நடக்கும் சம்பவங்களைப் பார்க்கின்றபோது மீண்டும் எழுதவேண்டும் போல இருந்தது.

எங்கே தொடங்குவது? விட்ட இடத்திலிருந்தா அல்லது தற்போதைய நிகழ்வுகளுடனா என்று யோசிக்க வேண்டியிருந்தது.

பழைய விடயங்களை பொருத்தமான வேளைகளில் அவ்வப்போது பார்ப்போம்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் முதல்தடவையாக இந்தியா செல்லவிருக்கிறார் என்ற தகவல் கிடைத்ததுமே தமிழ் கட்சிகள் எல்லாமே இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதுவதற்கு முண்டியடித்தன.

அந்தக் கடிதம் எழுதும் ஓட்டப் போட்டியில் பல சுவாரஸ்யமான சம்பவங்களும் வழக்கம்போல நடக்கத் தவறவில்லை.

கடந்த வருடம் தமிழ்த் தேசியக் கட்சிகள் (இப்படி எழுதுகின்ற ஒவ்வொரு வேளையிலும் ஒரு கேள்வி மனதில் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை - அதுபற்றி தனியாக ஒருநாளில் பேசுவோம்) பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்ததை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவின் ஏற்பாட்டில் எழுதப்பட்ட அந்தக் கடிதத்தில் அப்போது கூட்டமைப்பின் தலைவராக இருந்த சம்பந்தன் ஐயாவிடம் கையெழுத்தைப் பெறுவதற்காக நீண்டநாள் இழுபறிப்பட்டு கடைசியில் சில திருத்தங்களுடன் அவர் கையெழுத்திட்டார்.

பதின்மூன்றை நடைமுறைப்படுத்தச் சொல்லி இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்பதற்காகவே கடிதம் அனுப்ப முயற்சி எடுக்கப்பட்டது.

ஆனால், பதின்மூன்றை ஏறெடுத்தும் பார்க்க முடியாது என்று அடம்பிடித்த சம்பந்தன் ஐயா, கடைசியில் பதின்மூன்றுக்கு பதிலாக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்தக் கோருகின்ற கடிதமாக மாற்றியதுடன் அதில் கையெப்பமும் இட்டார்.

இப்போது, ரணில் இந்திியாவுக்கு பயணம் செய்யவிருப்பதால் அது குறித்து மீண்டும் கடிதம் எழுத முயன்றபோது அதில் கையெப்பமிட அவர் மறுத்தது ஏன் என்பது அவருக்கு மாத்திரம் தெரிந்த சங்கதி.

அதுவல்ல நாம் இன்று இங்கே சொல்ல வருவது.

அண்மையில், அமெரிக்க தூதுவர் தமிழ் கட்சிகளின் தலைவர்களை ஒன்றுசேர சந்தித்திருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அந்தச் சந்திப்பில், இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் தமிழரசுக் கட்சி ஏன் கையொப்பம் இடவில்லை என்று கேட்கப்பட்டபோது, தமிழரசின் சார்பில் அந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட எம். ஏ. சுமந்திரன், சொன்ன தகவல்தான் மண்டையை குழப்புவதாக இருந்தது.

முன்னர் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்தக்கோரி அனுப்பப்பட்ட கடிதத்தால்தான் இந்தியா தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது என்று கூறியிருக்கிறார்.

அதாவது, அப்படி கடிதம் எழுதுவதற்கு முன்னர் இந்தியா பதின்மூன்றுக்கு மேலான தீர்வுக்கு ஆதரவாக இருந்ததாகவும் அந்தக் கடிதத்தால்தான் இந்தியா இப்போது பதின்மூன்றுக்கு இறங்கி வந்திருக்கின்றது என்கிறார் சுமந்திரன்.

சுமந்திரன் அரசியலுக்கு வந்து பதினான்கு வருடங்கள் தான் ஆகின்றன. ஆனால், இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்குப் பின்னர் மாத்திரமல்ல, நமது ஆயுத இயக்கங்கள் இந்தியாவில் பயிற்சிபெற்ற காலத்திலிருந்து இந்தியாவுடன் நெருக்கமாக இருந்து வரும் ஒரு தலைவரும் அந்த சந்திப்பில் கலந்துகொண்டிருந்தார்.

தமிழீழம்தான் நமது பிரச்னைக்கு ஒரே தீர்வு என்று இளைஞர்கள் ஆயுதப் பயிற்சி எடுத்த காலத்தில்கூட, தனியரசுக்கு சார்பாக இந்தியா இருந்ததில்லை என்பதை அறிந்தவர் அவர்.

அவர் அமெரிக்கத் தூதுவருக்கு சொன்னாராம். இந்தியா பதின்மூன்றுக்கு மேலே எந்தக் கட்டத்திலுமே ஆதரவாக இருந்ததில்லை. நண்பர் எங்கிருந்து இந்த தகவலை பெற்றார் என்பதை அவர்தான் விளக்கவேண்டும் என்று.

கடைசியாக அனைத்து தமிழர் தரப்பினரையும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கொழும்பில் சந்தித்தபோதும், “பதின்மூன்றை முழுமையாக நீங்கள் அடையும்வரை இந்தியா உங்களோடு இருக்கும்“ என்று சொன்னதன் அர்த்தம் அவருக்கு புரிந்திருக்காது என்பதல்ல. ஆனால், அவர் தமிழ் மக்களின் ஞாபக மறதிமீது அதீத நம்பிக்கை கொண்டவர். தமிழ் மக்கள் எதைச்சொன்னாலும் நம்பிவிடுவார்கள் என்ற அவரின் நம்பிக்கை எவ்வளவு காலத்துக்கு இருக்குமோ தெரியவில்லை.

**- ஊர்க்குருவி.**

# அஸ்வெசும திட்டத்தை செயல்படுத்த அதிகாரிகளின் ஒத்துழைப்பு அவசியம்

## ஜனாதிபதியின் ஆலோசகர்

கொழும்பு, ஜூலை 20

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை வலுவூட்டவும், மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வழிகாட்டலுடன் ஆரம்பிக்கப்பட்ட அஸ்வெசும சமூக நலன்புரித் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரச அதிகாரிகளின் செயலூக்கமான பங்களிப்பு இன்றியமையாதது என ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானம் பெறும் மக்களின் முன்னேற்றத்துக்காக எடுக்கப்பட வேண்டிய கொள்கை ரீதியிலான தீர்மானங்கள் தாமதமின்றி எடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்ததுள்ள அவர், அந்த கொள்கைத் தீர்மானங்களை உரிய முறையில் எடுக்கத் தவறியதன் காரணமாகவே இந்நாடு, கடந்த காலங்களில் பல பொருளாதார பிரச்னைகளுக்கு முகம் கொடுத்ததாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அஸ்வெசும சமூக நலத்திட்டத்துக்கு அரச அதிகாரிகளின் பங்களிப்பு தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அஸ்வெசும சமூக நலன்புரி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் இதுவரையான முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டதுடன், சிறுநீரக நோயாளிகள், அங்கவீனர்கள் மற்றும் முதியோர் கொடுப்பனவுகளுக்காக பதிவு செய்யப்பட்ட அனைவருக்கும் அந்தக் கொடுப்பனவுகளை வழங்குமாறு சாகல ரத்நாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

இந்த வேலைத்திட்டத்தை காலத்துக்கு ஏற்ப நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி முன்னெடுப்பதன் முக்கியத்துவத்தையும் இதன் போது அவர் சுட்டிக்காட்டினார்.

(ஐ)

# பருத்தித்துறையில் மீட்கப்பட்ட சடலம் மாத்தறை வாசியுடையது

வடமராட்சி, ஜூலை 19

வடமராட்சி - பருத்தித்துறை துறைமுக கடற்பகுதியில் கரையொதுங்கிய சடலம் இனங்காணப்பட்டுள்ளது.

சுஜீவ அபயவர்த்தன விக்கிரமசிங்க (வயது-55) என்ற மாத்தறையை சேர்ந்த நபரே இவ்வாறு சடலமாக இனங்காணப்பட்டார். அவரின் சடலத்தை அவரின் குடும்பத்தினர் நேற்று அடையாளம் காட்டினர்.

பருத்தித்துறை துறைமுக இறங்கு தளத்தை ஒட்டி நேற்று முன்தினம் சடலம் ஒன்று கரையொதுங்கியது.

சம்பவ இடத்துக்கு சென்ற பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

பருத்தித்துறை நீதிவான் கிரிசாந் பொன்னுத்துரை சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டதுடன் விசாரணைக்கும் உத்தரவிட்டார்.

இந்த நிலையில், இறந்தவரின் குடும்பத்தினர் நேற்று பருத்தித்துறை வந்து சடலத்தை அடையாளம் காட்டினர்.

மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். (ஐ-02)

# கார் ரயர் காற்றுப் போனதால் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் காயம்!

முல்லைத்தீவு, ஜூலை 20

காரின் ரயர் காற்றுப் போனதால் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

முல்லைத்தீவு, விசுவமடு - றெட்பானா சந்திக்கு அண்மையாக நேற்று புதன்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காரின் ரயர் திடீரெனக் காற்றுப் போனதால் கட்டுப்பாட்டை இழந்து எதிரில் பயணித்த மோட்டார் சைக்கிளை மோதியது.

இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
20.07.2023 வியாழக்கிழமை
ඊළනාඩු
சோபகிருது வருடம், ஆடி 04

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# இந்திய அழுத்தம் அவசியம்

ஜனாதிபதியின் புதுடில்லி பயணம் தமிழ் சூழலில் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றது. தமிழ் கட்சிகளின் வேண்டுகோளுக்கு அப்பால் தமிழ் சிவில் சமூகத்தின் மத்தியிலிருந்தும் இந்தியாவை நோக்கி கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் கட்சிகளின் கடிதத்தில் குழப்பகரமான நிலைப்பாடுகள் இருந்தாலும்கூட அனைவரும் இந்தியாவின் தலையீட்டை கோருகின்றனர்.

இந்தியாவை நோக்கிச் செல்லும்போது முன்வைக்கப்படும் ஒரு கேள்வி - ஏன் இந்தியாவை நோக்கிச் செல்ல வேண்டும்? இந்தக் கேள்வி நியாயமானது. ஒரு நாட்டுக்குள் தீர்த்துக்கொள்ள வேண்டிய விவகாரத்தை எதற்காக இன்னொரு நாட்டை நோக்கிச் செல்ல வேண்டும்? இலங்கையின் பிரச்னையை இலங்கைக்குள் தீர்த்துக்கொள்ள முடியாமல் போனமையின் காரணமாகவே வெளியாரை நோக்கிச் செல்ல வேண்டியிருக்கின்றது.

யுத்தத்துக்குப் பின்னரான, கடந்த 14 வருடகால தமிழர் அரசியல் முற்றிலும் வெளியாரை நோக்கியதாகவே இருந்தது. இந்த நிலையில்தான் இந்தியாவின் தலையீடு தவிர்க்க முடியாததாகும். ஏனெனில், இந்த விடயத்தில் ஏனைய - எந்தவொரு நாட்டுக்கும் இல்லாத ஒரு தகுதி இந்தியாவுக்கு உண்டு.

ஏனெனில், இந்திய - இலங்கை ஒப்பந்தம் அதற்கான அடித்தளத்தையும் உரித்தையும் வழங்குகின்றது. இந்தப் பின்புலத்தில்தான் இந்தியா தொடர்ந்தும் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான அரசியல் தீர்வை வலியுறுத்தி வருகின்றது. இலங்கை 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த மறுக்கும்போது அடுத்ததாக யாரை நோக்கிச் செல்ல வேண்டும்? இந்தியா தவிர்த்து வேறு எவரிடம் சென்று முறையிடுவது? இந்த பின்புலத்தில்தான் இந்தியாவை நோக்கிய கோரிக்கைகள் அவசியப்படுகின்றன. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பங்காளி என்னும் வகையில் ஒரு பங்காளியான இலங்கை அதன் பொறுப்பை நிறைவேற்றாதபோது அடுத்த பங்காளியிடம்தான் செல்ல முடியும்?

இந்தியாவைப் பொறுத்தவரையில் இலங்கையின் விடயத்தில் கசப்பான அனுபவங்கள் உண்டு. குறிப்பாக தமிழர்கள் தொடர்பில். ஏனெனில், முன்னைய அனுபவங்கள் இந்தியாவுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடியதல்ல. மாறாக, சங்கடத்துக்குரியது. இந்தப் பின்புலத்தில்தான் இந்தியாவும் விடயங்களை எடுத்த எடுப்பில் கையாள முடியாத நிலையிலிருக்கின்றது. ஆனாலும் இந்தியா அதன் அழுத்தங்களை சற்று தீவிரப்படுத்த வேண்டும்.

இந்தியாவுக்கு அந்தப் பொறுப்பு உண்டு. கடந்தகாலத்தில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் அதிருப்திகள் இருந்தாலும்கூட, இந்தியா தமிழர் பிரச்னையில் மீண்டும் ஒரு மூன்றாம் தரப்பாக தலையீடு செய்ய வேண்டும். இந்தியா முன்னரைப் போன்று நேரடியாக தலையீடு செய்யாவிட்டால் இலங்கை அரசாங்கம் முன்னோக்கிப் பயணிக்காது. அழுத்தங்கள் இன்றி இலங்கையின் ஆட்சியாளர்கள் செயல்பட்டதாக வரலாறில்லை. இதனை இந்தியா நன்கறியும்.

## பரிந்துரையை புறக்கணித்தே மருந்துகள் கொள்வனவு!

### சிரேஷ்ட மருத்துவ ஆலோசகர்

*கொழும்பு, ஜுலை 20*

*நிபுணர்களின் ஆலோசகர் குழுவின் பரிந்துரைகளை புறக்கணித்து சுகாதார அமைச்சால் கோரப்பட்ட மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது என சிரேஷ்ட மருத்துவ ஆலோசகர் மருத்துவர் ஆனந்த விஜயவிக்ரம குற்றஞ்சாட்டியுள்ளார்.*

*சில மருந்து வகைகளை கொள்வனவு செய்வதற்கு விசேட ஆலோசகர் குழு சில சந்தர்ப்பங்களில் அனுமதி மறுத்துள்ளது. எவ்வாறாயினும், தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் பணிப்பாளர் சபை குழுவின் பரிந்துரைகளை மீறி, சில பதிவு செய்யப்படாத மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு அனுமதி அளித்துள்ளது.*

*“விசேட ஆலோசகர் குழுவால் அங்கீகரிக்கப்படாத மருந்துகளை தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் பணிப்பாளர் சபை கொள்வனவு செய்வதுதான் பிரச்னை” என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*இது தொடர்பில் வினவியபோது, தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் பணிப்பாளர் நாயகம் சில மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்றிருந்தால், அவற்றைக் கொள்வனவு செய்வதற்கு தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் பணிப்பாளர் சபை கட்டுப்பட்டிருப்பதாகத் தெரிவித்ததாகவும் மருத்துவர் விஜயவிக்ரம மேலும் தெரிவித்தார். (ஐ)*

## இசை பயிலரங்கும் பகிர்வும்

*யாழ்ப்பாணம்,ஜுலை 20*

*சமூக நீதிக்கான வெகுஜன அமைப்புடன் மாற்றத்துக்கான இளையோர் அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்யும் இசையின் புதிய பரிமாணங்களை கண்டறிவோம் என்ற தலைப்பிலான இசை பயிலரங்கும் பகிர்வும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.00 முதல் மாலை 4.00 வரை யாழ். மாவட்ட சர்வோதய மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது.*

*இலங்கையின் பிரபல இசை ஆளுமைகளான எம். சி. ராஜ், தினுபா கோதாகொட, நதிக வெலிகேபொல ஆகியோர் இதில் பங்கேற்கவுள்ளனர். (ஐ)*

## விமான நிலைய ஊழியர்கள் போராட்டம் முன்னெடுப்பு!

*கொழும்பு, ஜுலை 20*

*சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கட்டுநாயக்க விமான நிலைய ஊழியர்கள் நேற்று போராட்டத்தை முன்னெடுத்தனர்.*

*நிறுவனங்களுக்கு இடையிலான ஊழியர் சங்கத்தின் தலைவர் கே.டி.எஸ். பிரியந்த கூறுகையில்,*

*விமான நிலைய ஊழியர்கள் கடைசியாக 2018 ஆம் ஆண்டு சம்பள உயர்வைப் பெற்றனர். சேவை விதிகளின் படி விமான நிலைய ஊழியர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை சம்பள உயர்வு வழங்கப்படுவது வழக்கம். எனவே, விமான நிலைய ஊழியர்களுக்கு குறைந்தபட்சம் 33 ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வை வழங்குமாறு கோரிக்கை விடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*இந்த ஊழியர்களின் போராட்டம் காரணமாக, விமானங்கள் அல்லது விமான நிலையத்தின் அன்றாட நடவடிக்கைகளில் எந்தவித இடையூறுகளோ அல்லது பாதிப்புகளோ ஏற்படவில்லை என விமான நிலையத்திற்கு பொறுப்பான அதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ)*

## சிறப்பு சொற்பொழிவு

*யாழ்ப்பாணம்,ஜுலை 20*

*சரவணை - தேவபுரம் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில் வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.*

*ஆலயப் பிரதான மண்டபம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஓகஸ்ட் 2ஆம் திகதி புதன் கிழமை வரை தினமும்*

*மாலை 6.00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்த சொற்பொழிவு நடைபெறவுள்ளது.*

*சொற்பொழிவை சைவப் புலவர்கள் செ. த. குமரன், பொன். சந்திரவேல், சி. கா. கமலநாதன், இளம் சைவப் புலவர்கள் ச. நவநீதன், க. கயிலைநாதன், த. மனோஜ் குமார், க. கயிலைவாசன், நித்திய பாபுதரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ஐ)*

## சிறப்பு சொற்பொழிவும் நாயன்மார் குருபூசையும்

*யாழ்ப்பாணம், ஜுலை 20*


*சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், சிவசிறீ பால. திருகுணானந்தக் குருக்கள் நடத்தும் வாராந்த பெரிய புராண சிறப்புச் சொற்பொழிவு தொடர் 15 - சிறுப்பிட்டி அருள்மிகு நாகதம்பிரான் ஆலயஆலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.*

*நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.*

*சேக்கிழார் பெருமான் குருபூசையை தொடர்ந்து, “தமக்கு கிடைக்கும் பொருட்கள் யாவற்றையும் இறைவன் திருவமுதுக்கென்றே ஒதுக்கியவைந்த நாயனார்“ என்னும் விடயப்பொருளில் இளம்சைவப்புலவர் நித்திய பாபுதரன் சொற்பொழிவாற்றுவார்.*

*இதன்போது, மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு



ஜூலை - 20 வியாழக்கிழமை
சோபகிருது வருடம் - ஆடி 04
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : திரிதியை




**மேடம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**இடபம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புதுயுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் நினைப்பதை முடித்துக் காட்டுவீர்கள். வெற்றிக்கு வித்திடும்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்து வந்த பிணக்குகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும் உத்தியோகத்தில் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பழைய கசப்பான சம்பவங்களைப் பற்றி யாரிடமும் விவாதிக்க வேண்டாம். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருப்பது நல்லது. சிக்கனம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி இருக்கும். சகோதரர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். முதலீடு செய்யலாம். பணிகளை போராடி முடிப்பீர்கள். பொறுமை தேவைப்படும்.

**கன்னி**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் புதுத்தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உங்கள் கை ஓங்கும்.

**துலாம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். திடீர் சந்திப்புகள் நிகழும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உங்களின் முயற்சிகள் பலிதமாகும். சாதித்துக் காட்டும் நாள்.

**விருட்சிகம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் லாபம் வரும். ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். நீண்ட நாட்களாக தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் பழைய பிரச்சினைகள் தலைதூக்கும். வியாபாரத்தில் புது முடிவுகளை தவிர்க்கவும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். போராட்டமான நாள்.

**மகரம்**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்ய தொடங்குவீர்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை உங்களுக்கு சாதகமாக முடியும். வியாபாரத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். அமைதி நிலவும்.

**கும்பம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய சரக்குகளை கொள்முதல் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மீனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். புதியவர்கள் அறிமுகமாவார்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். கனவு நனவாகும்..

# தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு தமிழகத்தில் தலைமை அ. தி. மு. கவே

## எடப்பாடி பழனிசாமி

புதுடில்லி, ஜூலை 20

தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு அ. தி. மு. கதான் தலைமை என அ. தி. மு. க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தேசிய ஜனநாயக முற்போக்கு கூட்டத்தில் பங்கேற்பதற்காக அ. தி. மு. க. பொதுச்செயலாளர் டில்லி சென்றுள்ளார். டில்லி சாகேத் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள அ.தி.மு.க அலுவலகத்துக்கு நேற்று எடப்பாடி பழனிசாமி சென்று பார்வையிட்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

“சர்வதேச அரங்கில் இந்தியாவை பிரதமர் மோடி பெருமைப்படுத்தியுள்ளார். பிரதமர் மோடி சிறப்பாக ஆட்சி நடத்தி வருகிறார். பாராளுமன்றத் தேர்தலில் 330 இடங்களில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெறும். தேசிய ஜனநாயக கூட்டணியில் சிறிய கட்சிகள் பெரிய கட்சிகள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவருக்கும் உரிய மரியாதை கொடுக்கப்படுகிறது.

இந்தியாவிலேயே ஊழலுக்காக கலைக்கப்பட்ட ஒரே அரசாங்கம் தி. மு. கதான். காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியில் தி. மு. க. இருக்கும் சமயத்தில் 2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் ராசா, கனிமொழி கைது செய்யப்பட்டனர்.

சமீபத்தில் அமைச்சர் செந்தில் பாலாஜி வருவாய் துறையால் கைது செய்யப்பட்டு சிறையிலுள்ளார். உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடியிடம் வருவாய் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். அ. தி. மு. கவை குறைகூற தி. மு. கவினருக்கு அருகதை கிடையாது.

அனைத்து கட்சிகளுக்கும் தேர்தலில் வெற்றி பெறுவது தான் நோக்கமாக இருக்கும். அப்பொழுது சூழ்நிலைக்கு ஏற்றவாறு கூட்டணி அமையும். தேசிய அளவில் தேசிய ஜனநாயக கூட்டணி, தமிழ்நாட்டை பொறுத்தவரை இந்த கூட்டணிக்கு தலைமை தாங்குவது அ. தி. மு. கதான் -என்றார்.

(ஐ)

# அமைச்சர் பொன்முடியின் 42 கோடி ரூபாய் முடக்கம்!

## வருவாய்துறை அறிவிப்பு

சென்னை, ஜூலை 20

அமைச்சர் பொன்முடி வீட்டில் கணக்கில் வராத 81. 7 இலட்சம் இந்திய ரூபாயும் 13 இலட்சம் இந்திய ரூபாய் மதிப்பிலான வெளிநாட்டு பணமும் பறிமுதல் செய்யப்பட்டது. அவரின் வங்கி கணக்கில் இருந்த நிரந்தர வைப்புத்தொகை 41.9 கோடி இந்திய ரூபாயும் முடக்கப்பட்டுள்ளது என்று வருவாய் துறை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

தமிழ்நாடு உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி வீட்டில் நேற்றுமுன்தினம் காலை முதல் வருவாய்த்துறையினர் சோதனையில் ஈடுபட்டனர். இந்நிலையில், இந்த சோதனை குறித்து வருவாய் சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் பொன்முடி, அவரின் மகனுக்கு சொந்தமான 7 இடங்களில் சோதனையிடப்பட்டது.

சோதனையில் வராத ரூ. 81.7 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது, ரூ.13 லட்சம் மதிப்பிலான வெளிநாட்டு பணமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. விசாரணையைத் தவறாக வழி நடத்தும் விதமாக, அந்த தொகை குடும்பத்துக்கு சொந்தமான மருத்துவமனை வாயிலாக பெறப்பட்டதாக கூறப்பட்டது.

மேலும் வங்கி கணக்கில் இருந்த நிரந்தர வைப்புத்தொகை ரூ.41.9 கோடி முடக்கப்பட்டுள்ளது. அத்துடன், தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது - என்று கூறப்பட்டுள்ளது.

(ஐ)

# அமைச்சர் பொன்முடி முதல்வரை சந்தித்தார்

சென்னை, ஜூலை 20

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி ஆலோசனை நடத்தினார்.

அவருக்கு சொந்தமான இடங்களில் வருவாய் துறையினர் நடத்திய சோதனை நடவடிக்கையை தொடர்ந்தே இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இந்த சோதனை நடவடிக்கையின் போது, முதலமைச்சர் ஸ்டாலின் பெங்களூரில் நடைபெற்ற எதிர்க்கட்சிகள் கூட்டத்தில் பங்கேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் இருந்தார். நேற்று முன்தினம் இரவு அவர் சென்னை திரும்பியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து நேற்றுக் காரைல, சென்னையில் உள்ள முதல்வரின் இல்லத்தில் அமைச்சர் பொன்முடி நேரில் சந்தித்து வருவாய் துறையினர் நடத்திய சோதனை தொடர்பில் ஆலோசனை செய்தார்.

(ஐ)

# 2024இல் புதிய இந்தியா உருவாகும் முதலமைச்சர் ஸ்டாலின் நம்பிக்கை!

சென்னை, ஜூலை 20

2024இல் புதிய இந்தியா உருவாகும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

பெங்களூாரில் நடந்த எதிர்க்கட்சிகளின் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றுவிட்டு, தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் விமானம் மூலம் நேற்றுமுன்தினம் இரவு சென்னை வந்தார். சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

பெங்களூரில் கூட்டம் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் நடந்தது. இந்தியாவின் ஜனநாயகம், அரசமைப்பு சட்டம், மதச்சார்பின்மை, மாநில சுயாட்சி, ஏழை மக்களுக்கு வழங்கப்படும் நலன் போன்றவை நெருக்கடியில் சிக்கியுள்ளன.

சர்வாதிகாரத்தில் நாடு சிக்கி சிதையுண்டு சென்றுகொண்டிருக்கிறது. 2024 பாராளுமன்றத் தேர்தலில் பா. ஜ. கவை தோற்கடிக்க வேண்டும் என்பதை மையமாக கொண்டு, இந்தியா முழுவதும் உள்ள எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றாக சேர்ந்துள்ளன. பாட்னாவில் நடந்த முதல் கூட்டத்தில் 16 கட்சிகள் பங்கேற்றன. பெங்களூரில் நடந்த இரண்டாவது கூட்டத்தில் 26 கட்சிகள் பங்கேற்றுள்ளன. தமிழகத்தில் எப்படி கூட்டணி அமைத்து வெற்றி பெற்று வருகிறோமோ, அதுபோல் இந்தியா முழுவதும் இதுபோன்ற கூட்டணி அமைத்து வெற்றி பெற வியூகம் வகுக்கப்பட்டுள்ளது.

அகில இந்திய அளவில் கொள்கை கூட்டணியாகவும், மாநில அளவில் தேர்தல் கூட்டணியாகவும் அமையும். பாட்னா, பெங்களூர் கூட்டத்தால் மிகப் பெரிய மகிழ்ச்சி கிடைத்துள்ளது. இந்த மகிழ்ச்சி இந்தியாவுக்கு தரும் மகிழ்ச்சியாக இருக்கும்.

இந்த கூட்டணிக்கு ‘இண்டியா’ என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. அடுத்த கூட்டத்தை மும்பையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அந்த கூட்டத்தில் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து பேசப்படும். 2024இல் புதிய இந்தியா உருவாகும். கடந்த பாராளுமன்றத் தேர்தல் சூழ்நிலையில் ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக அறிவித்தேன். ஆனால், இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையில் யார் ஆட்சியில் இருக்கக்கூடாது என்பதுதான் எங்கள் கொள்கை. அதுதொடர்பாக பேசிக் கொண்டிருக்கிறோம் - என்றார்.

(ஐ)













# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா நேற்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூலை 20

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா நேற்று காலை ஆரம்பமானது.**

**பல்கலைக்கழக வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில், பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில்ஆரம்பமான இந்தப் பட்டமளிப்பு விழா, நாளை வெள்ளிக்கிழமை வரை 8 அமர்வுகளாக நடைபெறவுள்ளது.**

இதில், 2 ஆயிரத்து 278 பேர் பட்டங்களையும், தகைமை சான்றிதழ்களையும் பெறவுள்ளனர். இந்தப் பட்டமளிப்பு விழாவில், உயர் பட்டப் படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம், சேர் பொன். இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம், கலைப்பீடம், பொறியியல் பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், மருத்துவ பீடம், தொழில்நுட்பப் பீடம், இந்துக் கற்கைள் பீடம், சித்த மருத்துவ அலகு மற்றும் வவுனியா வளாகத்தைச் (தற்போதைய வவுனியா பல்கலைக்கழகம்) சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில் நுட்பக் கற்கைகள் பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தால் வழங்கப்படும் வெளிவாரிப் பட்டங்களைப் பெறும் பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், சகல பட்டக் கற்கைநெறிகளுக்குமாக 32 தங்கப்பதக்கங்களும், 10 புலமைப் பரிசில்களும், 25 பரிசில்களும் வழங்கப்பட இருக்கின்றன. மேலும், ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் மதிப்புமிக்க பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப் பதக்கத்தை பீட மட்டத்தில் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், கலைப்பீடம் மற்றும் மருத்துவபீடத்தைச் சேர்ந்த மூவரும், பல்கலைக்கழக மட்டத்தில் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவரும் பெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வேற்றுக்கிரகத்தினரின் தலையீட்டையும் தமிழ் அரசியல்வாதிகள் கோரக்கூடும்!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

கொழும்பு, ஜூலை 20

தமிழ் அரசியல்வாதிகள் இனிமேல், எமது மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு வேற்றுக் கிரகவாசிகள் தலையிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'மனித உரிமைகள் மீறல் தொடர்பாக பிரஸ்தாபிக்கின்ற சர்வதேச ரீதியான அமைப்புகள் எவையும் பலஸ்தீனம் மீதான இஸ்ரேலிய தாக்குதல்களுக்கு எதிராக எந்தவிதமான கருத்துகளும் தெரிவிக்காமல் இருக்கின்றன என்று எழும் விமர்சனங்கள் எழுந்து வருகின்ற நிலையில், எமது தமிழ்த் தரப்பு அரசியல்வாதிகள் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரிடம் முறைப்பாடுகளை முன்வைத்துள்ளன என்று தெரிய வருகின்றது.

இலங்கையில் மழை பெய்தாலும் சர்வதேசம் குடைபிடிக்க வேண்டும் எனக் கூக்குரலிடுகின்ற இந்தத் தமிழ் அரசியல் தரப்பினருக்கு, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் நல்லதொரு பதிலை வழங்கினார்- அதாவது 'அனைத்துக்குமே சர்வதேசம், சர்வதேசம் எனக் கூறிக் கொண்டு எதிர்பார்த்துக் கொண்டிருக்காதீர்கள். சர்வதேசத்திற்கும் சில வரையறைகள் உள்ளன' எனக் கூறினார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தமிழ் அரசியல்வாதிகள் இனிமேல், எமது மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு வேற்றுக் கிரகவாசிகள் தலையிட வேண்டும் எனக் கோரினாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எமது மக்களின் பிரச்னைகளை, எமது பகுதிகளின் பிரச்னைகளை தீர்க்க வேண்டும் என்ற உண்மையான அக்கறை காரணமாகவே ரணில் விக்கிரமசிங்க அனைத்து தமிழ்க் கட்சிகளினதும் பிரதிநிதிகளை அடிக்கடி அழைத்து கலந்துரையாடி வருகின்றார்.

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று, அவருடன் கலந்துரையாடிவிட்டு வெளியில் வந்ததும் ஊடகங்களுக்காக 'இது சாத்தியப்படாது. அது சாத்தியப்படாது' என அபசகுணமாகக் கூறிக் கொண்டிராமல், நாங்கள் முன்வைக்கின்ற விடயங்களை செயல்படுத்திக் கொள்வதற்கான வழிவகைகளையும் நாம் கையாள வேண்டும். அதுதான் உண்மையான மக்கள் பிரதிநிதி ஆற்ற வேண்டிய பொறுப்பாகின்றது.' - என்றும் சொன்னார்.

# அதீத போதை ஏற்றியமையாலேயே கொக்குவில் இளைஞர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 20

இணுவிலில் சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் போதை ஊசி ஏற்றப்பட்டமையாலேயே உயிரிழந்தார் என்று மரண பரிசோதனை அறிக்கையில் வெளிப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு கொக்குவிலை சேர்ந்த 22 வயது இளைஞர் ஒருவர் போதனா வைத்தியசாலைக்கு சொந்தமான இணுவிலில் உள்ள விடுதி வளாகத்தில் சடலமாக மீட்கப்பட்டார்.

அந்த விடுதியில் இரவு பணியிலுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தரை காண சென்ற நிலையிலேயே அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

பொலிஸாரின் சோதனையில், இளைஞனின் வலது கையில் ஊசி செலுத்தப்பட்டு, வெளியே எடுக்கப்படாமலிருந்தது. வாய், மூக்கிலிருந்து இரத்தம் வழிந்தோடியிருந்தது. அருகில் பீடி, எலுமிச்சைப்பழம் போன்றன காணப்பட்டன. இதனால், அவர் போதை மருந்தை ஏற்றியபோது உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது. அவர் திங்கட்கிழமை இரவே உயிரிழந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், மரண பரிசோதனை அறிக்கையில் அதீத போதையாலேயே இளைஞர் உயிரிழந்தமை தெரிய வந்துள்ளது. (ஐ)

# சுவாமி விபுலானந்தரின் நினைவுதினம் அனுஷ்டிப்பு

வவுனியா, ஜூலை 20

வவுனியாவில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் 76 ஆவது நினைவு தினம் நேற்று புதன்கிழமை அனுஸ்டிக்கப்பட்டது.

வவுனியா மாநகர மத்தியில் அமைந்துள்ள அவரின் சிலையடியில் வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வில் நடைபெற்றது.

சுவாமி விபுலானந்தரின் சிலைக்கு வவுனியா நகர சபையின் முன்னாள் தலைவர் ஜி. ரி. லிங்கநாதன் மாலை அணிவித்ததுடன் மாநகர சபையின் செயலாளர் உட்பட்ட பலரும் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

(ஐ)



# வல்லையில் புற்தரைக்கு விசமிகள் தீ வைத்தனர்!

வடமராட்சி, ஜுலை 20

வல்லை வெளியில் காய்ந்த புற்தரையை விசமிகள் சிலர் தீ மூட்டி எரித்துள்ளனர். இதனால், அந்தப் பகுதியே புகை மூட்டமாக மாறியதுடன், அவ்வழியாக பயணித்தவர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

வடமராட்சி - வல்லை இராணுவ முகாமுக்கு முன்பாக இருந்த புற்தரையே நேற்று முன்தினம் இரவு இவ்வாறு எரியூட்டப்பட்டது.

இந்தப் புற்தரை நிலம் இலங்கையின் அரிய உயிரினமான கௌதாரி மற்றும் பறவையினங்களின் புகலிடமாகக் காணப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

*மலையக மக்களின் பயணத்தை நினைவுகூரும்:*

# மன்னாரிலிருந்து மாத்தளைவரை பாத யாத்திரை வரும் 29 ஆரம்பம்!

மன்னார், ஜுலை 20

**200 ஆண்டுகளுக்கு முன்னர் மலையகத்துக்கு அழைத்து வரப்பட்ட மலையக மக்கள் மேற்கொண்ட ஆபத்தான பயணத்தை நினைவுகூரும் வகையில் மன்னாரில் இருந்து மாத்தளை வரையான பாதயாத்திரை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

எதிர்வரும் 29ஆம் திகதி மன்னாரில் ஆரம்பிக்கும் இந்தப் பாத யாத்திரை ஒகஸ்ட் 12ஆம் திகதி மாத்தளையில் நிறைவு பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மலையக பெருந்தோட்டங்களில் தொழில்புரிவதற்காக தென்னிந்தியாவில் இருந்து மலையக மக்கள் அழைத்து வரப்பட்டு 200 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. மன்னாரில் தரையிறங்கிய மக்கள் பல்வேறு துன்பங்களுக்கு முகங்கொடுத்து மாத்தளை வரை கால்நடையாக ஆபத்தான பயணத்தை மேற்கொண்டனர்.




மாண்புமிகு மலையகத்துக்கான கூட்டிணைவு, தேசிய கிறிஸ்தவ பேரவை, சிவில் சமூக அமைப்புகள் மற்றும் மலையக சமூகத்துடன் பணிபுரியும் தனி நபர்கள் அடங்கிய குழுவால் இந்தப் பாத யாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மலையக தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த பாதயாத்திரை மற்றும் அதனுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலந்துரையாடல்களில் பங்கேற்குமாறு அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றிருந்தது. (ஐ)

# வெளிநாட்டு தொழில் வாய்ப்பு வழிகாட்டல் மக்கள் மயமாக்கம்

கொழும்பு, ஜுலை 20

வெளிநாட்டு தொழிலை எதிர்பார்த்திருப்போரின் தகுதி மற்றும் தொழில் வாய்ப்புகளை ஒன்றுடன் ஒன்றை தொடர்புபடுத்தும் ஒருங்கிணைக்கப்பட்ட வழிகாட்டுதல் மற்றும் பரிந்துரை அமைப்பு திட்டம் மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளதாக தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு தொழிலுக்காக செல்லும் எதிர்பார்ப்புடன் இருக்கும் தொழிலாளர்களின் தகுதிகள் மற்றும் வேலை வாய்ப்புகளுடன் தொடர்புபட்ட விடயங்களை ஒன்றுடன் ஒன்றை தொடர்புபடுத்தும் இணைய வழி அடிப்படையிலான திட்டம் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் ஆசியா - பசுபிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளர் ஆகியோரால் யாழ்ப்பாணம் முற்றவெளி விளையாட்டரங்கில் நடைபெற்ற கண்காட்சியின் போது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் புலம்பெயர்வு தொடர்பான சர்வதேச அமைப்பு ஆகியன இணைந்து இந்த இணைய வழி அடிப்படையிலான திட்டத்தை தயாரித்துள்ளன.

இத்திட்டத்தின்படி, வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக செல்ல எதிர்பார்த்துள்ள தொழிலாளர்களின் தகுதிகள் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு தேவையான தகுதிகளுடன் தொடர்புபடுத்தி, தேவையான தகுதிகளை பூர்த்தி செய்யாத வேலை தேடுபவர்களை தொழிற்கல்விக்கு நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வெளி நாடுகளில் அதிக தொழிலாளர் தேவை உள்ள இருபது துறைகள் ஆரம்ப கட்டத்தில் இதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. அதேநேரம், முதற்கட்டமாக வெளிநாட்டு வேலை வாய்ப்பை நாடும் அரச ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பிற்கு தேவையான தகுதிகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான வழிகாட்டுதல்கள் இதன் மூலம் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பொலிஸ் திணைக்களம் மீதான வழக்கு உயர்நீதிமன்றால் தள்ளுபடி!

கொழும்பு, ஜுலை 20

நாட்டில் கடந்த வருடம் மே 9ஆம் திகதி நடைபெற்ற வன்முறை சம்பவங்களை தடுக்க பொலிஸ் திணைக்களம் தவறியதால் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று தெரிவித்து பொலிஸ் திணைக்களத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்கை உயர்நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்தது.

நாட்டில் நடைபெற்ற வன்முறைகளைத் தடுக்கவோ அல்லது அதற்கு எதிராகப் போதுமான நடவடிக்கைகளை எடுக்கவோ தவறியதன் மூலம் இலங்கை பொலிஸ் திணைக்களம் மக்களின் மனித உரிமைகளை மீறியுள்ளன என்று கூறி "உயிர் உரிமை" மனித உரிமைகள் மையத்தால் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அரச சட்டத்தரணி ஷமிந்த விக்ரமவினால் முன்வைக்கப்பட்ட ஆரம்ப ஆட்சேபனைகளை பரிசீலித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எஸ். துரைராஜா, யசந்த கோட்டகொட மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

# பெண் நடத்திய சூதாட்ட விடுதி சுற்றிவளைப்பில் 15 பேர் கைது!

கொழும்பு, ஜுலை 20

பெண் ஒருவரால் நடத்தப்பட்ட சூதாட்ட விடுதியொன்று பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது. அங்கு ஒரு இலட்சம் ரூபாய் பணத்துடன் 15 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அங்கொடை - தெல்கஹாவத்தையில் உள்ள சொகுசு வீடொன்றில் இயங்கிய விடுதியே இவ்வாறு சுற்றிவளைக்கப்பட்டது.

தெல்கஹாவத்தையில் உள்ள இரண்டு மாடி வீடொன்றில் உள்ள குறித்த பெண் பல வருடங்களாக இந்தச் சூதாட்ட விடுதியை முக்கிய பிரமுகர்களின் உதவியுடன் நடத்தி வந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திபமுல்லேரியா பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த நால்வர் மாறுவேடத்தில் குறித்த இடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்றும், அவர்களிடமிருந்து கிடைத்த தகவலின்படி 20 பேர் கொண்ட பொலிஸ் குழு ஒரே நேரத்தில் வீட்டைச் சுற்றி வளைத்து சந்தேகநபர்களை கைது செய்தது என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# செயற்கை நுண்ணறிவு குறித்து கலாசாலையில் விசேட உரை



யாழ்ப்பாணம், ஜுலை 20

செயற்கை நுண்ணறிவு பற்றிய விசேட உரை கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெற்றது.

கலாசாலையில் நூற்றாண்டு கால கருத்தரங்கு வரிசையில் நேற்று புதன்கிழமை பிரதி அதிபர் க. செந்தில்குமரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் அதிதி பேச்சாளராக யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப கல்லூரியின் தகவல் தொழில்நுட்பதுறை சிரேஷ்ட விரிவுரையாளர் சிறீ சேதுபரன் செயற்கை நுண்மதி பற்றி கருத்துரை வழங்கினார்.

நிகழ்வில் அதிதி அறிமுக உரையை விரிவுரையாளர் மாலதி பத்மநாதன் ஆற்றினார்.

முதலாம் வருட ஆங்கில நெறி ஆசிரிய மாணவி ஒரிமா ஜெல்சியா அவுட்ஸ்கோன் வகுப்பறையில் தகவல் தொழில்நுட்பத்தின் பாவனை என்னும் தலைப்பில் உரையாற்றினர். (ஐ)

# முறைப்பாட்டை ஏற்கமறுத்த கான்ஸ்டபிள் பணி இடைநீக்கம்

கொழும்பு, ஜுலை 20

மாவத்தகமை பொலிஸ் நிலையத்தில் முதியவர் ஒருவரால் வழங்கப்பட்ட முறைப்பாட்டை பதிவு செய்ய மறுத்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. கடந்த திங்கட்கிழமை முதியவர் ஒருவர் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று மருமகன் தனது மகளை தாக்குகிறார் என்று கூறிய போதும், இந்த முறைப்பாட்டை குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் பதிவு செய்ய மறுத்துள்ளார்.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மாவத்தகம உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விசாரணைகளை மேற்கொண்டு குறித்த பொலிஸ் கான்ஸ்டபிளை பணி இடைநிறுத்தம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 24 மணி நேரத்தில் டெங்குக்கு இருவர் பலி!

கொழும்பு, ஜுலை 20

**நேற்று காலை நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் இரு டெங்கு மரணங்கள் பதிவாகின என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.**

மேலும், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 36 டெங்கு மரணங்கள் பதிவாகின என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, டெங்கு அதி அபாய வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மருத்துவ அதிகாரி பிரிவுகளின் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 53 ஆயிரத்து 700 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

(ஐ)

## கொழும்பு தேசிய மருத்துவமனை: ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளரால் பணிநிறுத்த போராட்டம் முன்னெடுப்பு

கொழும்பு, ஜுலை 20

ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து அரச மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தினர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் தொழிற்சங்க நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் பேச்சாளரின் கூற்றுப்படி ஆய்வக சேவைகளின் சுமுகமான செயல்பாட்டுக்கு இடையூறு விளைவிக்கும் அமைப்பில் பல அதிகாரிகளின் தேவையற்ற தலையீடுகள் ஐந்து கோரிக்கைகளில் அடங்கும்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் இடம்பெற்ற பல சுற்றுப் பேச்சுகள் பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்படாமல் முடிவடைந்ததாலேயே தாம் இந்த பணிநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# சுட்டுக்கொலை

கொழும்பு, ஜுலை 20

அம்பலாந்தோட்டை - கொக்கல்லையில் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் ஒருவர் கொலையானார்.

நேற்று புதன்கிழமை அதிகாலை நடத்தப்பட்ட இந்த துப்பாக்கி சூட்டில் இதே இடத்தைச் சேர்ந்த 62 வயது நபரே கொல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# இந்திய மருந்துகள் தரக்குறைவென முத்திரை குத்த முயற்சிக்கவேண்டாம்!

*அமைச்சர் பந்துல குணவர்த்தன*

கொழும்பு, ஜுலை 20

இலங்கைக்கு மாத்திரமின்றி உலகின் பல நாடுகளுக்கும் இந்தியா மருந்துகளை விநியோகிக்கிறது. குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக தெரிவிக்கப்படும் கருத்துகளால் இந்தியாவின் மருந்துகள் தரக்குறைவானவை என்ற முத்திரையை குத்திவிட முடியாது. அதற்கான முயற்சிகளையும் எடுக்க வேண்டாம் என அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது ஏதேனுமொரு விடயத்தை மையமாக வைத்து, அதனால் எதிர்வரும் மாதங்களில் பெரும் அபாயம் ஏற்படப் போவதாக மக்களை பீதியடைய



செய்யும் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், அவ்வாறு எந்த அபாயமும் தற்போது ஏற்படவில்லை.

கடந்த காலங்களில் தேசிய கடன் மறுசீரமைப்புக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோதும், ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பெரும் ஆபத்து ஏற்படவுள்ளதாக மக்களை பயமுறுத்தினர். ஆனால், இன்று அவ்வாறு ஏதுவுமே இடம்பெறவில்லை.

எனவே, சமூகத்தில் அரசாங்கத்துக்கு எதிராக இவ்வாறு திட்டமிட்ட போலிப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்பது தெளிவாகிறது. அதற்கமையவே மருந்துகள் குறித்தும் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் வகையிலான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தியாவானது இலங்கைக்கு மாத்திரமின்றி, பல நாடுகளுக்கும் மருந்துகளை விநியோகித்து வருகிறது. எனவே ஒரு சிலர் தமது குறுகிய நோக்கங்களுக்காக இந்திய மருந்துகள் தரக்குறைவானவை என்ற முத்திரையை குத்த முயற்சிக்கின்றனர். இவ்வாறான கருத்துக்கள் இராஜதந்திர ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் அவற்றை தவிர்த்துக் கொள்ளுமாறு வலியுறுத்துகின்றோம் - என்றார்.

(ஐ)

# விடுதியில் யுவதி வன்புணர்வு கோடீஸ்வர வர்த்தகர் கைது!

கொழும்பு, ஜுலை 20

கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர விடுதியில் யுவதியை வன்புணர்வு என்ற குற்றச்சாட்டில் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஐரோப்பாவுக்கு மாணவர் வீசாவில் அனுப்பி வரும் நிறுவனம் ஒன்றை நடத்தி வரும் கோடீஸ்வர வர்த்தகரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

வன்புணர்வுக்கு உள்ளான யுவதி அந்த நிறுவனத்தில் பணியாற்றுபவர் என்று தெரிய வருகிறது.

நிறுவனத்தின் சார்பில் ஐந்து நட்சத்திர விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கலந்துரையாடலுக்கு யுவதிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. அங்கு சென்ற யுவதியை தனது அறைக்கு அழைத்த வர்த்தகர் கதவை மூடிவிட்டு யுவதியை வன்புணர்வுக்கு உள்ளாக்கினார் என்று கூறப்பட்டது.

(ஐ)

# மலையக மக்களின் பிரச்னைகள் ஒருநாள் விவாதம் நடத்த இணக்கம்!

கொழும்பு, ஜுலை 20

மலையக மக்களின் பிரச்னைகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்த வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பியுமான வீ. இராதாகிருஷ்ணன் சபையில் கோரிக்கை விடுத்தார்.

இந்த விவாதத்தை நடத்துவதற்கு தாம் இணங்குவதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இராதாகிருஷ்ணன் எம்.பி இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்,

தோட்டப்புறங்களில் பல பிரச்னைகள் உள்ளன. அவை தொடர்பில் ஒருநாள் விவாதமொன்றை நடத்த நாளொன்றை வழங்குங்கள். தோட்ட நிர்வாக பிரச்னைகள் உள்ளன. அங்குள்ளவர்கள் சிறிய அறையொன்றை அமைக்கும் போது அவர்களை அங்கிருந்து வெளியேற்றுகின்றனர். இவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல்களும் செய்யப்பட்டிருக்கின்றன. இதனால் அடுத்த வாரத்தில் இது தொடர்பில் விவாதத்துக்கு நாளொன்றை வழங்குங்கள் - என்றார்.

இதன்போது, சபையில் இருந்த பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண பதிலளிக்கையில்,

நீங்கள் கூறும் பிரச்னைகள் தொடர்பில் அமைச்சு மட்டத்தில் தலையீடுகளை செய்கின்றோம். இதேபோன்று நீங்கள் கோரும் விவாதத்துக்கும் நாங்கள் இணங்குகின்றோம் - என்றார்.

(ஐ)

# திரிபீடகம் நூலை ஆங்கிலத்தில் இணையத்தில் வெளியிட முடிவு!

கொழும்பு, ஜுலை 20

இலங்கையின் தேசிய மரபுரிமையாக அறிவிக்கப்பட்டுள்ள "சம்புத்த ஜெயந்தி திரிபீடக" நூல் தொடர் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு இணையத்தில் வெளியிடப்பட்டு பின்னர் அச்சிடப்படும் என புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சில் நடைபெற்ற சந்திப்பின் போது மகா சங்கத்தினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பௌத்த மதத்தை உலகம் முழுவதும் பரப்பும் நோக்கில் உள்ளூர் மற்றும் சர்வதேச அளவில் திரிபீடகத்தை கற்க ஆர்வமுள்ள அனைத்து மதகுருமார்களின் நலன் கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மகா நாயக்கர்களின் ஆலோசனை மற்றும் அனுமதியைப் பெற்ற பின் இப்பணி மேற்கொள்ளப்படவுள்ளது. இந்தப் பணியை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு, உயர் சபை, மேற்பார்வைச் சபை மற்றும் நிறைவேற்று சபை ஆகிய மூன்று சபைகள் நியமிக்கப்பட வேண்டும் எனவும் இதற்காக அமைச்சரவையின் அனுமதியைப் பெற வேண்டும் எனவும் அமைச்சர் விக்ரமநாயக்க மேலும் தெரிவித்தார்.

(ஐ)

# தானியங்கள் உற்பத்தியில் நாடு தன்னிறைவடைந்தது

*விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர*

கொழும்பு, ஜுலை 20

அரிசி, பச்சைப்பயறு, கௌப்பி, உழுந்து, குரக்கன், நிலக்கடலை போன்ற தானியங்கள் உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைந்துள்ளது. இதனால், இந்த ஆண்டு மீண்டும் இவற்றை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

2021இல் இரசாயன உரங்கள் மீதான தடையால் அரிசி மற்றும் பிற உள்ளூர் உணவுப் பயிர் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. இதனால், 2022 இல் 400 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 8 இலட்சம் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. அத்துடன், ஏனைய உணவுப் பயிர்களையும் இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது.

இதன்படி, 2023 ஆம் ஆண்டு வரை அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் அரசுக்கு இல்லை. இந்த நாட்டுக்கான அரிசியின் வருடாந்த தேவை 24 இலட்சம் தொன்னாகும்.

கடந்த பெரும்போக அறுவடையின் மூலம் 27 இலட்சம் தொன் அரிசியை உற்பத்தி செய்ய முடிந்துள்ளது. எனவே, இந்த வருடம் மீண்டும் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை



எனவும் அமைச்சர் கூறினார்.

(ஐ)

ஈழநாடு



# உலகில் அணு ஆயுதத் தாக்குதல் ஆபத்து:
## உக்ரைன் போர் அதற்குக் காரணமாக அமைந்துவிடுமா?

உக்ரேன் மீதான ரஷ்ய போர் தொடங்கியதிலிருந்து புடின் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதாக மிரட்டி வருகிறார். ஆனால் பெலாரஸ் நாட்டுக்கு அவற்றை அனுப்பிவைத்தது முதன்முதலாக மேற்கொள்ளப்பட்ட ஒரு உறுதியான நடவடிக்கையாக பார்க்கப்படுகிறது.

இந்த அணு ஆயுதங்கள் உக்ரேன் நாட்டு எல்லைக்கு அருகில் உள்ள பெலாரஸில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. அங்கு இருந்து போலந்து மற்றும் லிதுவேனியா போன்ற நேட்டோ நாடுகளையும் குறிவைக்க முடியும்.

இத்துடன், 500 கிலோ மீட்டர் தூரம் வரை அணு ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தக் கூடிய ஏவுகணைகள் மற்றும் போர் விமானங்களும் அனுப்பப்பட்டுள்ளன.

இந்நிலையில், ரஷ்யாவின் இந்த நடவடிக்கை ஒரு பொறுப்பற்ற செயல் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார். உக்ரேனின் ஜபோரிஷியா அணுமின் நிலையத்தையும் ரஷ்யா ஆக்கிரமித்துள்ளது.

ஆனால் தற்போதைய உலகில் ரஷ்ய அதிபர் புடினின் அச்சுறுத்தல்கள் மட்டும் கவலைக்குரியவை என்பதை விட, அணு ஆயுத தயாரிப்பில் அமெரிக்காவையும் ரஷ்யாவையும் சமன் செய்ய சீனாவும் விரும்புகிறது என்பது கவனிக்கத்தக்கது.

அணு ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தங்கள் எல்லா இடங்களிலும் காலாவதியாகின்றன என்ற போதிலும், புதிய ஒப்பந்தங்கள் எதுவும் இயற்றப்படவில்லை.

இந்த கட்டுரை மூலம் உலகில் அணுகுண்டு தாக்குதல் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதா என்பதை அறிய முயற்சிப்போம்.

**ரஷ்யாவின் அணுசக்தி அச்சுறுத்தல்**

ரஷ்யாவின் இறையாண்மை மற்றும் இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், சந்தேகத்திற்கு இடமின்றி, அணு ஆயுதங்களைப் பயன்படுத்தப் போவதாக ரஷ்யா எச்சரித்துள்ளது.

ரஷ்யாவிடம், போர்க்களத்தில் பயன்படுத்தக்கூடிய பல சிறிய தந்திரோபாய அணு ஆயுதங்கள் உட்பட ஆயிரக்கணக்கான அணு ஆயுதங்கள் உள்ளன. இந்த தந்திரோபாய அணு ஆயுதங்களில் சில ஹிரோஷிமாவில் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டைப் போலவே சக்திவாய்ந்தவை.

பெலாரஸ் நாட்டில் ரஷ்யா தனது அணு ஆயுதங்களை நிலைநிறுத்தியுள்ளது எவ்வளவு பெரிய கவலையாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள, ரஷ்யாவின் முன்னாள் அணுசக்தி பேரப் பேச்சாளரும், இப்போது வியன்னாவின் அணுஆயுத குறைப்பு மற்றும் பரவல் தடுப்பு மையத்தின் மூத்த ஆராய்ச்சியாளருமான நிகோலாய் சோகோவிடம் பேசினோம்.

அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் ரஷ்யாவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டிருப்பதற்கான அறிகுறி இது என்று அவர் கூறினார். மேலும், “ரஷ்யாவில் அணு ஆயுதங்களை குறைவாகப் பயன்படுத்துவது குறித்து நிபுணர்களிடையே பொது விவாதம் உள்ளது. ஆனால் அது ரஷ்ய அரசின் சிந்தனையை மட்டுமே பிரதிபலிக்கிறது. இது ஒரு தீவிரமாக கவனிக்கவேண்டிய விஷயம்,” என்றார்.

இப்படி பெலாரஸ் நாட்டில் அணு ஆயுதங்களை நிலைநிறுத்துவது உக்ரேனை விட நேட்டோ உறுப்பு நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக நிகோலாய் சோகோவ் அச்சம் தெரிவித்துள்ளார்.

“உக்ரேனுக்கு எதிரான தாக்குதலின் போது அந்நாடு மேற்கொள்ளும் எதிர்த்தாக்குதல்கள் ரஷ்யாவில் ஒரு பினாமி போராக பார்க்கப்படுகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ரஷ்யாவின் தாக்குதலும் அங்கு உக்ரேனுக்கு எதிரானது அல்ல என்பது மட்டுமல்ல, அது நேட்டோவுக்கு எதிரான தாக்குதலாக அந்நாட்டில் பார்க்கப்படுகிறது. உக்ரேன் மீது ரஷ்யா அணுகுண்டு தாக்குதல் நடத்தலாம் என்று பலர் நினைக்கிறார்கள்.”

“ஆனால் எனக்கு வேறு கருத்து உள்ளது. அது சாத்தியமில்லை என்று நான் நினைக்கிறேன். உக்ரேன் மீதான இத்தாக்குதலை அணு ஆயுதப் பயன்பாடு வரை ரஷ்யா எடுத்துச் செல்லும் ஆபத்து இருப்பதையும் நான் உணர்கிறேன்.”



மேற்கத்திய நாடுகளில் இந்த ஆபத்து தீவிரமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆனால் விளாடிமிர் புடின் தற்போதைய போரை எப்படி இந்த எல்லைக்கு எடுத்துச் செல்வார்?

இதற்கு பதிலளித்த நிகோலாய் சோகோவ், “திடீரென அணு ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தப்படாது. முதலில் வழக்கமான ஆயுதங்கள் பயன்படுத்தப்படும். சிறிய அளவில் அவை இருக்கும். இதில், உக்ரேனின் எதிர்த்தாக்குதலில் தொடர்புடைய நேட்டோவின் இலக்குகளை ரஷ்யா குறிவைக்கலாம்.

“இதற்கு நேட்டோ எவ்வாறு எதிர்வினையாற்றுகிறது என்பது மோதல் எவ்வளவு தூரம் அதிகரிக்கும் என்பதை தீர்மானிக்கும். நேட்டோவுக்கு ஒரு வலுவான செய்தியை அளிக்கும் அளவுக்கு ரஷ்யா அணுகுண்டு சோதனை ஒன்றையும் நடத்தலாம். இதே போல், போலந்து மீதான அணு ஆயுத தாக்குதலின் அச்சுறுத்தல் அதிகரிக்கலாம். இது போன்ற தாக்குதல்கள், நேட்டோவுக்கு ஒரு செய்தியைத் தெரிவிக்கும் விதத்திலேயே இருக்கும். ஆனால் இந்த நிலைமை மோசமாகி பெரிய அளவில் வெடிக்கும் ஆபத்தும் உள்ளது.



அணு ஆயுத மோதலின் ஆபத்து எழும் அளவுக்கு தாக்குதல்களை அதிகரிக்க ரஷ்யா விரும்புகிறது என்றும், அதற்கு பயந்து நேட்டோ பின்வாங்குவதாகவும் நிகோலாய் சோகோவ் கூறுகிறார். இது ஒரு அணு ஆயுத தாக்குதல் மிரட்டல்.

அப்படியென்றால் இந்த அணு ஆயுத அச்சுறுத்தலை உலகம் எப்படி எதிர்கொள்ளும் என்ற கேள்வி எழுகிறது.

**வேகமாக வளர்ந்து வரும் சீன ஆதிக்கம்**

ரஷ்யாவின் அணு ஆயுத அச்சுறுத்தலுக்குப் பதில் அளிப்பதில் அமெரிக்கா மிகுந்த கவனத்துடன், அளவாகவும் செயல்பட்டு வருகிறது. இருப்பினும், அணு ஆயுத தாக்குதலுக்கு ரஷ்யா தயாராகி வருவதாக நம்பவில்லை என அமெரிக்க நிர்வாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் அதிபர் ஜோ பைடன், ‘ரஷ்யாவின் தற்போதைய போக்கு ஒரு உண்மையான அச்சுறுத்தல்’ என்றே முழுமையாக நம்புகிறார்.

அமெரிக்காவில் உள்ள வுட்ரோ வில்சன் சர்வதேச அறிஞர்களுக்கான அமைப்பின் ராபர்ட் லிட்வாக், “ரஷ்யா அணு ஆயுதங்களைப் பயன்படுத்தினால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று அமெரிக்க நிர்வாகம் தெளிவுபடுத்தியுள்ளது,” என்று கூறுகிறார்.

மேலும், “ரஷ்யா தந்திரமாக ஒரு சிறிய அணு ஆயுதத்தைப் பயன்படுத்துமா அல்லது பெரிய வெடிகுண்டைப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்துமா என பைடன் அரசு ஆய்வு செய்துவருகிறது. அமெரிக்காவைப் பொறுத்தவரை, இரண்டு வகையான தாக்குதல்களையும் ஒரே மாதிரி தான் எடுத்துக்கொள்ளும். சிறிய ஆயுதம் என்றாலும் சரி, பெரிய அணுகுண்டு என்றாலும் சரி. அது அணு ஆயுதத் தாக்குதல் தான் என்றே பைடன் கருதுவார்.”

உக்ரேனின் ஜபோரிஷியா அணுமின் நிலையத்தை ரஷ்யா ஆக்கிரமித்ததற்கும் இதுவே பொருந்தும். இந்த ஆலை கடந்த ஒரு வருடமாக ரஷ்ய ஆக்கிரமிப்பில் இருந்துவருகிறது.

ரஷ்யா அங்கு கண்ணிவெடிகளை புதைத்துள்ளதாக உக்ரேன் அதிபர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார். அதே நேரத்தில், சர்வதேச அணுசக்தி அமைப்பின் அறிக்கைகளின்படி, இந்த ஆலைக்கு அருகில் பல குண்டுவெடிப்பு சம்பவங்கள் நடந்துள்ளன என்றும் தெரியவந்துள்ளது.

இது குறித்து ராபர்ட் லிட்வாக் பேசுகையில், “ரஷ்யா அணு ஆயுதங்களை பயன்படுத்தினால், அது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று அமெரிக்கா ஏற்கனவே கூறியுள்ளது,” என்றார்.

“ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு காரணமாக இந்த மின் உற்பத்தி நிலையத்தில் விபத்து ஏற்பட்டால், அமெரிக்கா அதை அணு ஆயுதத் தாக்குதலாகத் தான் பார்க்கும். இது மட்டுமல்ல, அதற்கேற்றவாறு தான் அமெரிக்கா செயல்படும் என்பது எனது கருத்து.”

ஆனால் புட்டினின் அணு ஆயுத அச்சுறுத்தல்களை யாராலும் தடுத்து நிறுத்த முடியுமா? சீன அதிபர் ஷி ஷின்பிங் ரஷ்யாவைக் கட்டுப்படுத்த முயற்சிகளை



மேற்கொள்ள வேண்டும் என்று சிலர் எதிர்பார்க்கிறார்கள். ஏனென்றால், ‘முதலில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டாம்’ என்ற கொள்கையை சீனா கடைபிடித்து வருகிறது. இதை வலியுறுத்தியும் பேசியுள்ளது. அதாவது ஏதாவது போர் ஏற்பட்டால் கூட, முதலில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த மாட்டோம் என்று உறுதியாக சீன அரசு கூறியுள்ளது.

ராபர்ட் லிட்வாக் பேசுகையில், “உக்ரேனுக்கு எதிராக பயன்படுத்தக்கூடிய ஆயுதங்களை ரஷ்யாவுக்கு அளிக்க வேண்டாம் என்று அமெரிக்கா சீனாவுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது. ஷி ஷின்பிங் ரஷ்ய அதிபர் புடினை சந்தித்தார். அப்போது இந்திய பிரதமர் நரேந்திர மோதியும் அங்கு இருந்தார். இந்த இரு தலைவர்களும் உக்ரேனுக்கு எதிராக எந்த வகையான அணு ஆயுதத்தையும் பயன்படுத்துவதை எதிர்த்தனர் என்று நினைக்கிறேன். இது ரஷ்யாவிற்கு சற்று தடையை ஏற்படுத்தியுள்ளது,” என்றார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்க சர்வதேச ஒப்பந்தங்கள் இருந்தன. ஆனால் அந்த ஒப்பந்தங்களின் ஆயுட்காலம் தற்போது முடிவடைந்த நிலையில் புதிய ஒப்பந்தங்கள் இதுவரை கையெழுத்தாகவில்லை.

அந்த நேரத்தில் இரண்டு வல்லரசுகள் மட்டுமே இருந்ததாகவும் இருதரப்பு ஒப்பந்தங்கள் மூலம் அணு ஆயுத மோதலை கட்டுக்குள் வைத்திருக்க முடியும் என்றும் லிட்வாக் கூறுகிறார்.

“ஆனால் இப்போது சீனாவும் ஒரு வல்லரசாக வளர்ந்துள்ளது. இதன் காரணமாக புதிய சவால்களும் எழுந்துள்ளன. போர் தீவிரமடைவதற்கான சாத்தியக்கூறுகள் விரிவடைந்துள்ளன. உதாரணமாக, ஐரோப்பாவின் பாதுகாப்பின் பார்வையில் உக்ரேன் மிக முக்கியமான நாடாக உள்ளது. வடகிழக்கு ஆசியாவில் தாய்வான் மற்றும் சீனா இடையேயும் இதே நிலைதான் காணப்படுகிறது.

சீனாவைப் பொறுத்தவரை, அது 1964 ஆம் ஆண்டிலேயே அணுசக்தி நாடாக மாறியது, ஆனால் இப்போது அது அணுசக்தி வல்லரசு நாடாக மாறியிருக்கிறது. இதன் காரணமாக சர்வதேச சமநிலை மற்றும் அரசுகளின் அமைப்பின் சிக்கல் அதிகரித்து வருகிறது.

**அணு ஆயுதங்களுக்கான சீனாவின் தற்காலத்திய போட்டி**

நோர்வே பாதுகாப்பு நிறுவனத்தில் இணை பேராசிரியராக பணியாற்றும் ஹென்ரிக் ஹெய்ம், இப்போது பல நாடுகள் தங்கள் பாதுகாப்புக் கொள்கையில் அணு ஆயுதங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன என்கிறார்.

இது ஆசியாவில் தீவிரமடைந்து வருவதாகத் தெரிகிறது. வடகொரியாவின் அணு ஆயுத சோதனைகள் மட்டுமின்றி, சீனாவின் அணுசக்தி கொள்கையும் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு சவாலை அதிகரித்துள்ளது.

“காலம் காலமாக, அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையே நிலவிய உறவுகளில் அணு ஆயுதங்கள் முக்கியத்துவம் பெறவில்லை. ஆனால், தற்போது சீனா தனது அணு ஆயுத தயாரிப்பை விரிவுபடுத்துவதால், இரு நாடுகளுக்கு இடையேயான போட்டி தீவிரமடைந்து வருகிறது.”

“சீனா தனது அணு ஆயுத உற்பத்தியை மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அதிகரித்தது. இது 2021 இல் உலக அளவில் தெரியவந்தது. மேற்கு சீனாவில் மூன்று இடங்களில் ஏவுகணைகளை ஏவும் மையங்கள் கட்டப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். ஒவ்வொரு இடத்திலும் 100க்கும் மேற்பட்ட நிலத்தடி கட்டிடங்கள் உள்ளன. இந்த ஏவுதளங்கள் கண்டுபிடிக்கப்பட்டதில் இருந்து, அணு ஆயுதங்களின் எதிர்காலம் மற்றும் அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான உறவு பற்றிய விவாதம் சூடுபிடித்துள்ளது.

சில மதிப்பீடுகளின்படி, தற்போது சீனாவிடம் 200 முதல் 300 அணு ஆயுதங்கள் உள்ளன என தெரியவந்துள்ளது. அதே நேரத்தில் அமெரிக்காவில் சுமார் 1500 அணு ஆயுதங்கள் உள்ளன.

(09ஆம் பக்கம் பார்க்க)

# சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு நினைவை கொண்டாடும் கரவை மக்கள்

இளையதம்பி இராகவன்

தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவரும் உடுப்பிட்டி, நல்லூர் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சிவசிதம்பரத்தின் பிறந்த நூற்றாண்டு நினைவை முன்னிட்டு அவரின் சொந்த ஊரான வடமராட்சி கரவெட்டி மக்களின் சார்பில் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் இன்று வியாழக்கிழமை மாலை அங்குள்ள மகேசன் விளையாட்டரங்கில் விழாவொன்றை ஏற்பாடு செய்திருக்கிறது.

அவரின் அரசியல் வாழ்வை விபரிக்கும் "தலைவர் சிவா 100" என்ற ஆவண நூலும் வெளியிட்டு வைக்கப்படுகிறது.

சிவசிதம்பரத்தை 'சிவா' என்றே எல்லோரும் அன்புடன் அழைப்பர். அவர் கரவெட்டியின் அடையாளங்களாக விளங்கிய மகத்தான ஆளுமைகளில் ஒருவர். சிவாவை நினைவு கூருவது என்பது சுமார் அரை நூற்றாண்டு காலமாக தமிழர் அரசியலை ஆகர்சித்திருந்த பெருந்தலைவர்களில் ஒருவரின் நினைவை மீட்டுவது என்பதற்கு அப்பால் கரவெட்டி மக்களைப் பொறுத்தவரை தங்கள் மத்தியில் வாழ்ந்த ஆளுமையின் நினைவை கொண்டாடுவதாக அமைகிறது.

இன்றைய பெரும்பாலான அரசில்வாதிகளுடன் ஒப்பிடும்போது சிவா போன்று அரசியல் வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் நேர்மையும் கண்ணியமும் கொண்ட தலைவர்கள் எம்மத்தியில் இருந்தார்கள் என்பதை இன்றைய இளம் சந்ததி நம்ப மறுக்கவும் கூடும்.

அரசியலில் கொள்கை வேறுபாடு கொண்டவர்கள் கூட சிவா மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தார்கள்.

தனது இளமைக்காலத்தில் கம்யூனிசக் கொள்கைகளினால் ஈர்க்கப்பட்ட சிவா தமிழ் மக்களுக்கு எதிரான



இனரீதியான பாகுபாடுகள் தீவிரமடையத் தொடங்கியதையடுத்து தமிழ்த் தேசியவாத கொள்கைகளை தவிர்க்க முடியாமல் தழுவிக்கொண்டார். அதற்கு பிறகு அவர் திரும்பிப்பார்க்கவே இல்லை. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் முதலில் பாராளுமன்றத்துக்கு தெரிவானபோதிலும், சிவா தமிழர்களின் ஐக்கியம் என்று வரும்போது கட்சி அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுத்ததில்லை. அதை 1961 இலங்கை தமிழரசு கட்சி முன்னெடுத்த சத்தியாக்கிரக போராட்டத்திலும் 1972 ஆம் ஆண்டுக்கு பிறகு தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் உருவாக்கத்திலும் அவரின் முழுமையான பங்கேற்பு பறைசாற்றியது.

பதவிகளைப் பெறுவதில் சிவா ஒருபோதும் அக்கறை காட்டியதில்லை. அவர் வகித்த பதவிகள் எல்லாமே அவரை தேடிவந்தவை. மற்றவர்களுக்கு பதவிகளை விட்டுக்கொடுப்பது என்று வரும்போது அதைச் செய்வதில் முதல் ஆளாக சிவா விளங்கினார். தன்னை முன்னிலைப்படுத்தும் அரசியலையும் சிவா ஒருபோதும் செய்ததில்லை.

ஒரு கட்டத்தில் தமிழ் காங்கிரஸ் மீதான சிவாவின் கட்டுப்பாடு அவரின் கைகளை விட்டுச் செல்கின்ற நிலை ஏற்பட்டபோது கூட அவர் கவலைப்படவில்லை. தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தை ஐக்கியப்பட்டு முன்னெடுப்பதற்கு அப்பால் தனக்கு வேறு எந்த அரசியல் நலனும் கிடையாது என்பதே சிவாவின் உறுதியான நிலைப்பாடாக இருந்தது. தனது இறுதி மூச்சுவரை அவர் அந்த நிலைப்பாட்டைக் கைவிடவில்லை.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னர் தமிழர்கள் மத்தியில் ஐக்கியம் முன்னென்றும் இல்லாத அளவுக்கு அவசியப்படுகின்ற இன்றைய காலகட்டத்தில் தமிழ் தேசியவாத அரசியல் சக்திகள் பல்வேறு அணிகளாக சிதறுண்டு கிடக்கின்ற கவலைக்குரிய நிலையை பார்க்கின்றபோதுதான் சிவாவின் மேன்மை பிரகாசமாக தெரிகிறது. ●

# உலகில் அணு ஆயுதத் தாக்குதல் ஆபத்து...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் 10 முதல் 12 ஆண்டுகளில் சீனாவின் அணு ஆயுதங்களின் எண்ணிக்கை அமெரிக்காவின் அணு ஆயுதங்களுக்கு சமமாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஹென்ரிச் ஹெய்மின் கூற்றுப்படி, "சீனா தனது அணு சக்தி கவசத்தை வலுப்படுத்த விரும்புகிறது. தேவைப்பட்டால், உக்ரேனில் ரஷ்யா மேற்கொண்ட நடவடிக்கையைப் போல, தாய்வானுக்கு எதிராக ஆக்கிரமிப்பு நடவடிக்கையை சீனாவும் எடுக்க முடியும்."

ஆனால் அமெரிக்காவின் அணு ஆயுதங்கள் மற்றும் பிற அதிநவீன ஆயுதங்களை மனதில் வைத்து, அமெரிக்காவுடன் எந்த மோதலையும் எதிர்கொள்ளும் திறனைப் பெற சீனா விரும்புகிறது என்றும் அவர் கூறுகிறார். "அமெரிக்கா முதலில் சீனாவுக்கு எதிராக அணு ஆயுதங்களைப் பயன்படுத்தினால், சீனா பதிலடி கொடுக்க முடியும்."

சீனாவின் அணு ஆயுதத் திட்டத்தை விரிவுபடுத்துவதைக் கருத்தில் கொண்டு, சீனா தனது 'முதலில் தாக்க மாட்டோம்' என்ற கோட்பாட்டைக் கைவிட தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவின் இந்த அணுசக்தி கொள்கை 1960களில் இருந்து இந்த கோட்பாடு நடைமுறையில் உள்ளது. இது தொடர்பாக அதிகாரப்பூர்வ உடன்பாடு எதுவும் இல்லை. மாறாக அது அந்நாடு தானாகவே அறிவித்துக் கொண்ட ஒரு உறுதிமொழியாக இருந்துள்ளது.

ஹென்ரிச் ஹெய்ம் பேசிய போது, "அமெரிக்காவும் ரஷ்யாவும் இந்த வகையான "முதலில் தாக்கமாட்டோம்" என்ற கோட்பாட்டை ஒருபோதும் அறிவித்ததில்லை. அமெரிக்காவும் ரஷ்யாவும் சில சூழ்நிலைகளில் அணு ஆயுதங்களை முதலில் பயன்படுத்துவதற்கான ஆபத்துக்கள் இன்னும் முழுமையாக இருக்கிறது என்பதே இதன் பொருள்.

அணு ஆயுதங்களை கட்டுப்படுத்துவது தொடர்பாக அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே பல பேச்சுவார்த்தைகள் நடந்தன. இரு நாடுகளுக்கும் இடையில் இதுபோன்ற பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகளும் பல முறை செய்யப்பட்டுள்ளன, ஆனால் அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையில் அத்தகைய பேச்சுவார்த்தை எதுவும் இதுவரை நடைபெறவில்லை. அதுபோன்ற பேச்சுக்கள் இனிவரும் காலங்களில் நடப்பதற்கான அறிகுறிகளும் தற்போதைய நிலையில் எங்கும் காணப்படவில்லை.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், புதிய ஸ்டார்ட் (மூலோபாய ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம்) உடன்படிக்கையில் சேர மாட்டோம் என்று ரஷ்யா கூறியது.

இந்த ஒப்பந்தத்தின் காரணமாக, பத்து ஆண்டுகளுக்கும் மேலாக, அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையே நீண்ட தொலைவுக்கான அணு ஆயுத கட்டுப்பாடு இருந்தது. ஆனால் தற்போது புதிய உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தை நடக்கும் வாய்ப்புகள் குறைவாகவே தெரிகிறது. அத்தகைய சூழ்நிலையில் நிலைமை எவ்வளவு சிக்கலானது என்பதைப் புரிந்து கொள்வதற்காக, ரோஸ் கோட்டெமோல்லருடன் நாங்கள் பேசினோம்.

நேட்டோவின் துணைப் பொதுச்செயலாளராக இருந்த அவர் தற்போது அமெரிக்காவின் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில் உள்ள ஸ்போக்லி இன்ஸ்டிடியூட் ஃபார் இன்டர்நேஷனல் கல்வியின் மூத்த ஆராய்ச்சியாளராக உள்ளார். ஏற்கெனவே நடைமுறையில் இருந்த ஒப்பந்தத்தின் விதிகள் முற்றிலும் புறக்கணிக்கப்படவில்லை என்று அவர் கூறுகிறார்.

"புதிய ஸ்டார்ட் ஒப்பந்தத்தை அமல்படுத்துவதை ரஷ்யா நிறுத்திவிட்டது. அதாவது, இப்போது அது அணுசக்தி தளங்களை ஆய்வு செய்ய யாரையும் அனுமதிக்காது. அணு ஆயுதத் தடையின் நிலையை அது தினசரி அடிப்படையில் அமெரிக்காவுடன் பகிர்ந்து கொள்வதில்லை.

"ஆனால், புதிய ஸ்டார்ட் ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் வரை, பழைய ஒப்பந்தத்தின் விதிகளின் கீழ் ஆயுதக் கட்டுப்பாட்டைப் பராமரிக்கும் என்று ரஷ்யா கூறியுள்ளது. அதாவது, அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும் மொத்த அமைப்புகளின் எண்ணிக்கையை (ஏவுகணைகள் மற்றும் போர் விமானங்களை) 700 ஆகக் கட்டுப்படுத்தும் என உறுதி அளித்துள்ளது. அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய இருநாடுகளும் தற்போதைக்கு அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதாக கூறியுள்ளன.

1991 ஆம் ஆண்டு சோவியத் யூனியன் முடிவுக்கு வந்த நேரத்தில் இருந்த நிலைமையைப் போன்றே தற்போதைய நிலை இருப்பதாக ரோஸ் கோட்மெல்லர் நம்புகிறார்.

"1991 மற்றும் 1992 இல் ஒரு பெரிய நெருக்கடி இருந்தது. நிச்சயமற்ற தன்மையும் உறுதியற்ற தன்மையும் இருந்தது. அந்த நேரத்தில், சோவியத் யூனியனில் இன்றைய ரஷ்யாவை விட அதிகமான அணு ஆயுதங்கள் இருந்தன. அப்போது அந்த ஆயுதங்களில் சில காணாமல் போய்விடுமோ அல்லது பயங்கரவாதிகளின் கைகளில் சிக்கக்கூடுமோ என்று நாங்கள் கவலைப்பட்டோம்."

'இந்த நேரத்தில், ரஷ்யாவிடம் நான்காயிரம் முதல் ஐந்தாயிரம் அணு ஆயுதங்கள் இருந்தன. அதே காலகட்டத்தில் அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியனின் தலைவர்களுக்கு இடையே இந்த அச்சுறுத்தல்களைக் குறைக்கும் முயற்சிகள் நிதர்சனமாக கண்களுக்குத் தெரிந்தன. ஆனால், அதுபோன்ற எதுவும் தற்போது தென்படவில்லை."

ரஷ்யாவில் அணு ஆயுதங்கயை முதலில் பயன்படுத்துவதா, அல்லது அணு ஆயுதங்களைப் பயன்படுத்தியாராவது தாக்கினால் மட்டுமே அவற்றைப் பயன்படுத்துவதா என்பது குறித்த விவாதம் கூட உள்ளது. இருப்பினும், இந்த விவாதத்தின் காரணமாக ரஷ்யாவின் அணுசக்தி கொள்கையில் எந்த மாற்றமும் ஏற்படாது என்று மேலை நாடுகளில் அஞ்சப்படுகிறது.

எவ்வாறாயினும், ரஷ்யாவிற்குள் உறுதியற்ற தன்மை நிலவுவது கவலைக்குரிய விஷயமாகப் பார்க்கப்படுகிறது. அண்மையில் ரஷ்யாவில் வாக்னர் குழுவின் கிளர்ச்சியும் ஏற்பட்ட நிலையில், இதுபோன்ற சம்பவங்கள் அதிபர் புதினின் நம்பகத்தன்மைக்கு சவால் விடும் வகையில் இருக்கின்றன.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், தந்திரோபாய அணு ஆயுதங்களைப் பயன்படுத்தி அதிகாரத்தின் மீதுள்ள பிடியைத் தக்கவைத்துக் கொள்ள அவர் திட்டமிடலாம்.

ஆனால் ரோஸ் குட்டெமோலர் பேசிய போது, "வாக்னர் குழுவின் கிளர்ச்சி புடினுடைய தந்திரோபாய அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை அதிகரிக்கும் என்னால் கூற முடியாது. ஆனால் ரஷ்யா உள்நாட்டுப் போரின் விளிம்பில் உள்ளது என்று விளாடிமிர் புடின் மூன்று நாட்களில் இரண்டு முறை கூறியதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு உள்நாட்டுப் போர் வெடித்தால் அங்குள்ள அணு ஆயுதங்கள் மற்றும் அணுசக்தி பொருட்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு பற்றிய கவலைகள் இயல்பாகவே எழும்," என்றார்.

ஆனால் அணு ஆயுதப் பரவல் மற்றும் கட்டுப்பாடு குறித்து சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியுமா?

சீனா எப்போதும் ஒரு வெளிப்படைத்தன்மையை விரும்பாத நாடாகவே இருந்து வருகிறது. இதனால் இது போன்ற முயற்சிகள் அவ்வளவு தூரம் சாத்தியமில்லை என்று ரோஸ் குட்டெமோலர் கூறுகிறார். சீனா தனது அணுசக்தி மற்றும் பிற ராணுவ திறன் பற்றிய தகவல்களை அமெரிக்காவுடன் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை என்பதே உண்மை. ஏனெனில் அந்நாட்டின் பலவீனத்தை அமெரிக்கா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சீனா சந்தேகிக்கிறது. ●

# நிதி வங்குரோத்து குறித்து ஆராயும் குழுவின் தலைமையை எதிர்க்கட்சிக்கு வழங்குங்கள்!

## சபையில் வலியுறுத்தினார் அநுரகுமார

கொழும்பு, ஜூலை 20

நிதி வங்குரோத்து நிலை தெரிவுக்குழு நடுநிலையுடன் - உண்மையுடன் செயல்பட வேண்டுமாயின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்குங்கள் அல்லது உண்மையை மறைத்து பொறுப்புக்கூற வேண்டியவர்களை பாதுகாக்க வேண்டுமாயின் தலைவர் பதவியை ஆளும் தரப்புக்கு வழங்குங்கள் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தனது உரையில், நாட்டின் வங்குரோத்து நிலைமைக்கு தற்போதைய அரசாங்கமே பொறுப்பு கூற வேண்டும். இந்த அரசாங்கம் பொதுஜன பெரமுன என்ற கட்சியை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவுக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் நிதி அமைச்சராக பதவி வகித்த பஸில் ராஜபக்ஷ பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளராக பதவி வகிக்கிறார். கட்சியின் தலைமை பதவியில் அப்போது ஜனாதிபதியாக இருந்தவரின் சகோதரர் ஆவார். இதனால் வங்குரோத்து நிலைமை தொடர்பில் உண்மையை அறிய வேண்டுமென்றால் இதற்கு காரணம் என்று கூறப்படும் தரப்பில் இருந்தே குழுவில் தலைவர் நியமிக்கப்படுவது நியாயமற்றது.

நிதி வங்குரோத்து தொடர்பில் உண்மையில், நடுநிலையான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டுமாயின் தெரிவுக்குழுவின் தலைவர் பதவியையும் உறுப்பினர்களில் பெரும்பாலானவர்களும் எதிர்க்கட்சியில் இருந்தே நியமிக்கப்பட வேண்டும். ஏற்கனவே, நீதிமன்றத்தில் பொருளாதார நெருக்கடி தொடர்பாக வழக்கு விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது. பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் கொண்டு வருமாறு நீதிமன்றத்திடம் கோரப்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்த வழக்குக்கு இணையாக பாராளுமன்றத்தில் விசேட தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த தெரிவுக்குழு குறித்த வழக்கின் குற்றவாளிகளுக்கு பதிலாக வேறு நபர்களை குற்றவாளிகளாக காட்டி அறிக்கையை வெளியிடலாம் - இது நியாயமற்றது. இந்த பாராளுமன்றத்தில் ஏதேனும் அதிகாரம் தொடர்பில் நம்பிக்கை இருக்குமாக இருந்தாலோ, நடந்துள்ள விடயம் தொடர்பில் உண்மையை அறிய வேண்டும் என்ற நோக்கம் இருந்தால் இதனை எதிர்க்கட்சிக்கு வழங்க வேண்டும் - என்றார். (ஐ)

## கொரோனா தொற்றால் இறந்தோரின் சடலங்கள் எரிப்பு:

# தீர்மானம் எடுத்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதி

கொழும்பு, ஜூலை 20

கோவிட் தொற்றால் மரணித்த சடலங்களை எரிப்பதற்கு பிழையான தீர்மானம் மேற்கொண்ட கொவிட் குழு அதிகாரிகளுக்கு எதிராக அமைச்சரவை மட்டத்தில் விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்போம் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கேட்ட கேள் விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ரவூப் ஹக்கீம், கோவிட் தொற்றால் மரணித்த முஸ்லிம்களின் சடலங்களை எரிப்பதற்கு கோவிட் குழு எடுத்த தீர்மானம் வைராக்கியமிக்க குற்றமாகும். அதனால், இவர்களுக்கு எதிராக பாதிக்கப்பட்ட குடும்பத்தின் உறவினர்கள் நீதிமன்ற நடவடிக்கைக்கு செல்ல நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அதனால் அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட கோவிட் குழு அதிகாரிகள் மேற்கொண்ட தீர்மானம் தொடர்பாக அமைச்சரவை மட்டத்தில் விசாரணை மேற்கொள்ள தயாரா? ஏனெனில், உலக நாடுகள் அனைத்தும் கொவிட் தொற்றில் மரணித்தவர்களின் சடலங்களை எரிப்பதற்கு தீர்மானத்தை எடுக்காத நிலையில், பிழையான விஞ்ஞான அடிப்படையில் தீர்மானம் மேற்கொண்டு முஸ்லிம்களுக்கு பெரும் தாக்கத்தை வழங்கிய இந்த அதிகாரிகள் தொடர்பாக குறைந்தபட்சம் அமைச்சரவை மட்டத்திலாவது விசாரணை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? என கேட்டார்.

இதற்கு அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல திலளிக்கையில், அந்த குழு தொடர்பாக விசாரணை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்தால் அது தொடர்பில் நாங்கள் நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

மீண்டும் எழுந்த ரவூப் ஹக்கீம், பிழையான தீர்மானம் மேற்கொண்ட குழுவின் அதிகாரிகள் தொடர்பாக விசாரணை நடத்துமாறே நான் பகிரங்கமாகக் கேட்கிறேன். அதனால் இதனை நீங்கள் செய்வீர்களா?

அதற்கு அமைச்சர் பதிலளிக்கையில், "ஆம், அது தொடர்பில் விசாரணை நடத்த நடவடிக்கை எடுப்பேன்", -என்றார்.





# வாகன தரிப்பிடத்தில் தீ விபத்து; 40 வாகனங்கள் எரிந்து நாசமாகின!

**வாழைச்சேனை, ஜூலை 20**

**தனியார் வாகனத் தரிப்பிடமொன்றில் ஏற்பட்ட தீ பரவலால் மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் முச்சக்கர வண்டி என 40இற்கும் மேற்பட்ட வாகனங்கள் தீக்கிரையாகின. இந்தச் சம்பவம் வாழைச்சேனை - கறுவாக்கேணியில் இடம்பெற்றது.**

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்த தீ பரவலால் ஒரு முச்சக்கரவண்டி, 34 மோட்டார் சைக்கிள்கள், 8 சைக்கள்கள் தீக்கிரையாகின.

திடீரென ஏற்பட்ட இந்த தீ பரவலால் பெரும் வெடிச்சத்தம் எழுந்ததுடன், பெரும் புகை மூட்டமும் ஏற்பட்டது. இதனால், அப்பகுதி மக்கள் அச்சமடைந்து அங்கிருந்து வெளியேறினர்.

விபத்து இடம்பெற்ற வாகன பாதுகாப்பு நிலையத்தில் அரச, தனியார் பணியாளர்கள், மாணவர்கள் தமது வாகனங்களை நிறுத்திவிட்டு பேருந்தில் பயணிப்பது வழக்கமாகும். இந்த நிலையிலேயே இந்தத் தீ விபத்து இடம்பெற்றுள்ளது.



வாகனங்களை இழந்தவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மின் ஒழுக்கால் இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# அனுமதியின்றி பேருந்து சேவை; சோதனை நடவடிக்கை ஆரம்பம்!

மட்டக்களப்பு, ஜூலை 20

மட்டக்களப்பிலிருந்து அனுமதிப்பத்திரமின்றி வெளி மாவட்டங்களுக்கான பயண சேவையில் ஈடுபடும் பேருந்துகளை கண்டறிவதற்கான சோதனை நடவடிக்கைகள் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட உதவி பொலிஸ் மா அதிபர் உயத். என். பி. லியனகேயின் ஆலோசனைக்கு அமைய மாவட்ட போக்குவரத்து பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சரத் சந்திரா தலைமையிலான போக்குவரத்து பொலிஸ் குழுவினர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இந்த சோதனை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு - கொழும்பு வீதியிலுள்ள பிள்ளையாரடி பகுதியில் பொலிஸார் சகல பேருந்துகளையும் மறித்து சோதனையிட்டனர். இரவு 8 மணிக்கு ஆரம்பித்த இந்த விசேட சோதனை நடவடிக்கை இரவு 11 மணிவரை முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, அம்பாறை அக்கரைப்பற்று, அட்டாளச்சேனை, கல்முனை, நிந்தவூர். களுவாஞ்சிக்குடி, கத்தான்குடி உட்பட பல பிரதேசங்களில் இருந்து போக்குவரத்து அனுமதிபத்திரமின்றி கொழும்பு மற்றும் வெளி மாவட்டங்களுக்கான சேவையில் 11 பேருந்துகள் ஈடுபடுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பேருந்துகளின் உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# உகந்தை முருகன் ஆலய ஆடிவேல் விழா ஆரம்பம்

காரைதீவு, ஜூலை 20

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலய வருடாந்த ஆடி வேல் விழா கொடியேற்றம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

முற்பகல் 10.30 மணியளவில் வசந்த மண்டப சிறப்பு பூஜையை அடுத்து ஆலய வண்ணக்கர் டி. எம். சுதுநிலமே திஸநாயக்க கொடிச்சீலையை சிரசில் வைத்து தாங்கிவந்தார்.

பலநூறு அடியார்களின் அரோகரா கோஷம் விண்ணைப் பிளக்க சரியாக 11.20 மணியளவில் கொடி ஏற்றப்பட்டது. கொடியேற்றத் திருவிழா ஆலய பிரதம குரு சிவசிறீ க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.



ஆடிவேல் விழா உற்சவம் தொடர்ந்து 13 நாட்கள் நடைபெற்று ஒகஸ்ட் 2ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவடையும்.

இந்தத் திருவிழாவை ஒட்டி விசேட பேருந்து சேவை மற்றும் அன்னதான சேவை நடைபெற்று வருகின்றது. (ஐ)

# நிழல்குடையை சீரமைத்தது கல்முனை இளைஞர் குழு!



கல்முனை, ஜூலை 20

கல்முனை - மட்டக்களப்பு பிரதான வீதியில் சேதமடைந்து காணப்பட்ட பயணிகள் நிழல் குடையை கல்முனை இளைஞர்கள் திருத்தி மக்கள் பாவனைக்கு கையளித்தனர்.

கல்முனை ஆதார மருத்துவமனை அருகே இருந்த பயணிகள் நிழல்குடையே இவ்வாறு திருத்தியமைக்கப்பட்டது. புலம்பெயர் மக்களின் பங்களிப்புடன் இந்த நிழல்குடை புனரமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# போராட்டத்தில் தாக்குதல்; மூன்று பேர் கைதாகினர்!

மட்டக்களப்பு, ஜூலை 20

மட்டக்களப்பில் இரா. சாணக்கியன் எம். பியை தாக்க முற்பட்ட இருவரை தாக்கினர் என்ற குற்றச்சாட்டில் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலும், இந்த சம்பவத்துடன் தொடர்புடைய 10 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் தலைமறைவாக உள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு தனியார் பேருந்து தரிப்பு நிலையத்தில் சம்பவ தினமான கடந்த திங்கட்கிழமை அனுமதி பத்திரமின்றி சேவையில் ஈடுபடும் தனியார் போக்குவரத்து பேருந்துக்களை தடுக்கக் கோரி தனியார் போக்குவரத்து பேருந்து உரிமையாளர்கள் மற்றும் நடத்துநர், சாரதிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் சாணக்கியனும் கலந்து கொண்டார்.

இதன்போது, சாணக்கியன் எம். பி. இந்த போக்குவரத்து அனுமதியில் ஊழல் இடம்பெற்றுள்ளது. இதன் பின்னணியில் அரசியல் கட்சி ஒன்று இருக்கிறது. என்று குற்றஞ்சாட்டினார். இதன்போது அங்கு பெரும் சர்ச்சை ஏற்பட்டது. இதன் போது இருவரை சிலர் விரட்டி விரட்டி தாக்கினர்.

இதில், ஒருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த நிலையிலேயே இவர்கள் மீது தாக்குதல் நடத்திய மூவரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்தனர்.

மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மாவடி கந்தசுவாமி ஆலயத்தின் ஆடிவேல் விழா கொடியேற்றம்!

காரைதீவு, ஜூலை 20

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மாவடி கந்தசுவாமி ஆலய வருடாந்த ஆடி வேல் விழா உற்சவத்தின் முதல் நாள் கொடியேற்றம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

முன்னதாக பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயத்தில் இருந்து விசேட பூஜையுடன் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

அடியார்களின் அரோகரா கோசம் விண்ணைப் பிளக்க ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கோவர்த்தன சர்மா முன்னிலையில் கொடி ஏற்றப்பட்டது.



ஆடிவேல் விழா உற்சவம் தொடர்ந்து 13 நாட்கள் இடம்பெற்று ஒகஸ்ட் 02ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது என ஆலய பரி பாலன சபை செயலாளர் சின்னத்தம்பி சிவகுமார் தெரிவித்தார். (ஐ)

# விளாடிமிர் புடினை கைது செய்வது போர் பிரகடனம் செய்வதற்கு சமன்!

## தென்னாபிரிக்க ஜனாதிபதி

**கேப்டவுன், ஜூலை 20**

**ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது நாட்டுக்கு வரும்போது அவரை கைது செய்வது போர் பிரகடனம் செய்வதற்கு சமமான விடயம் என்று தென்னாபிரிக்கா தெரிவித்துள்ளது.**

ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. ‘பிரிக்ஸ்’ மாநாடுக்காக ரஷ்ய ஜனாதிபதி புடின் அடுத்த மாதம் தென்னாபிரிக்கா செல்லவுள்ளார். இந்நிலையில், அங்கு வரும் புடினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் உறுப்பு நாடான தென்னாபிரிக்கா கைது செய்ய வேண்டும் என்று தென்னாபிரிக்காவின் முக்கிய எதிர்கட்சியான ஜனநாயக கூட்டணி நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இந்த நிலையிலேயே, “ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது நாட்டுக்கு வரும்போது அவரை கைது செய்வது போர் பிரகடனம் செய்வதற்கு சமமான விடயம்”, தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோச இதனை தெரிவித்துள்ளார்.



மேலும், இந்த நடவடிக்கை பொறுப்புணர்வு அற்றது என வர்ணித்துள்ள தென்னாபிரிக்க ஜனாதிபதி இது தென்னாபிரிக்காவின் பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும். அத்துடன், சர்வதேச நீதிமன்றம் தனக்கு இதிலிருந்து விலக்களிக்க வேண்டும். இது எங்களின் அரசமைப்புக்கு முரணானது. தென்னாபிரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே யுத்தத்தை இது தூண்டலாம் என்றும் ரமபோச கூறியுள்ளார்.

# பருவநிலை மாற்றம் அமெரிக்கா - சீனா பேச்சு

*வாஷிங்டன், ஜூலை 20*

பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து சீன உயரதிகாரிகளுடன் இந்த விவகாரத்துக்கான அமெரிக்க தூதர் ஜான் கெரி செவ்வாய்க்கிழமை பேச்சு நடத்தினார்.

உலகின் மிகப் பெரிய பொருளாதார சக்திகளான தங்களது இரு நாடுகளுக்கும் இடையே நல்லுறவை மேம்படுத்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உறுதிபூண்டுள்ளதாக அவர் கூறினார்.

பருவநிலை மாற்ற விவகாரத்தில் அமெரிக்காவும் சீனாவும் இணைந்து செயல்பட்டால் உலகில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று பேச்சின்போது கெரி கூறினார்.

பருவநிலை மாற்றத்துக்கு முக்கிய காரணமான கரியமில வாயுவை உலகிலேயே மிக அதிகமாக சீனாவும், அதற்கு அடுத்தபடியாக அமெரிக்காவும்தான் வளிமண்டலத்தில் கலக்கின்றன. 3ஆவது இடத்தில் இந்தியா உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# “நான் கைது செய்யப்படலாம்” டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு

*நியூயோர்க், ஜூலை 20*

அமெரிக்கப் பாராளுமன்ற வளாகத்தில் 2021 ஜனவரியில் நடந்த வன்முறைகள் தொடர்பில் தான் கைது செய்யப்படலாம் என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசின் இரகசிய ஆவணங்களை சட்டவிரோதமாக தனது வீட்டில் வைத்திருந்தமை தொடர்பில் டொனால்ட் ட்ரம்ப் மீது ஏற்கெனவே நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாராளுமன்ற வளாக வன்முறைகள் தொடர்பிலும் தன் மீது குற்றச்சாட்டு சுமத்தப்படலாம் எனவும் தான் கைது செய்யப்படக்கூடும் என எதிர்பார்ப்பதாகவும் ட்ரம்ப் கூறியுள்ளார்.

2021 ஜனவரி 6 ஆம் திகதி, ஜோ பைடனின் தேர்தல் வெற்றியை உறுதிப்படுத்தி சான்றிதழ் அளிப்பதற்கான நடவடிக்கைகள் பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டபோது ட்ரம்பின் ஆதரவாளர்களால் பாராளுமன்றத்தில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

4 தினங்களுக்குள் ஜூரிகள் முன்னிலையில் முற்படுமாறு தனக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், இதற்கு அர்த்தம் கைது மற்றும் குற்றச்சாட்டு எனவும் ட்ரம்ப் கூறியுள்ளார்.

77 வயதான டொனால்ட் ட்ரம்ப் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடுவதற்கு முயற்சிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஒடெஸா துறைமுகத்தின்மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்

## தானிய ஏற்றுமதி ஒப்பந்தத்திலிருந்து விலகிய அடுத்தநாளே தாக்கியது!



*கீவ், ஜூலை 20*

உக்ரைனுடனான தானிய ஒப்பந்தத்தை நிறுத்துவதாக அறிவித்த மறுநாளே, தானியங்களை ஏற்றுமதி செய்யப் பயன்படும் துறைமுகம் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இது குறித்து உக்ரைன் இராணுவத்தின் தெற்கு படைப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கருங்கடல் பகுதியில் அமைந்துள்ள ஒடெஸா துறைமுகத்தின் மீது ஏவுகணைகளை வீசி ரஷ்யா செவ்வாய்க்கிழமை அதிகாலை தாக்குதல் நடத்தியது. குருஸ் வகையைச் சேர்ந்த 6 ‘கலிபர்’ ரக ஏவுகணைகளைக் கொண்டு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதற்கு முன்னதாக, அந்தப் பகுதியில் உக்ரைன் வான்பாதுகாப்பு தளபாடங்களை செயலிழக்கச் செய்யும் முயற்சியாக அவற்றின் மீது ஆளில்லாத விமானங்கள் மூலம் குண்டுகளை வீசியுள்ளது.

ரஷியா வீசிய 6 ஏவுகணைகளையும், 25 ஆளில்லா விமானங்களையும் உக்ரைனின் வான் பாதுகாப்பு ஏவுகணைகள் இடைமறித்து அழித்தன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களின் சிதறல்கள் விழுந்ததிலும், அதிர்வலைகளாலும் சில துறைமுகக் கட்டமைப்புகள், குடியிருப்புகளில் சேதம் ஏற்பட்டது. இதில் ஒரு முதியவர் காயமடைந்தார் என்று அதிகாரிகள் கூறினர்.

முன்னதாக, உணவுப் பற்றாக்குறை நிலவி வரும் ஆபிரிக்க, ஆசிய நாடுகளுக்கு உக்ரைனிலிருந்து கருங்கடல் வழியாக தானியங்களைக் கொண்டு செல்வதற்காக அந்த நாட்டுக்கும், தங்களுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் நடைமுறையை தற்காலிகமாக நிறுத்திவைப்பதாக ரஷயா திங்கள்கிழமை அறிவித்திருந்தது.

இந்த நிலையில், அந்த ஒப்பந்த நடைமுறையை நிறுத்தி வைப்பதாக அறிவித்த மறுநாளே, தானியங்களை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான முக்கியத்துவம் வாய்ந்த ஒடெஸா துறைமுகத்தின் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# வெப்ப அலையின் தாக்கத்தால் ஐரோப்பாவில் காட்டு தீ பரவல்!

*லண்டன், ஜூலை 20*

ஐரோப்பாவில் கடந்த சில நாட்களாக வீசி வரும் வெப்ப அலை காரணமாக, அந்தப் பிராந்தியத்தின் தெற்குப் பகுதிகளில் காட்டுத் தீ பரவி வருகிறது.



இதன் விளைவாக, தெற்கு ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் காட்டுத் தீ பரவி வருகிறது. கிரீஸின் முக்கியப் பகுதியும் இதில் அடங்கும். அந்த நாட்டின் டெர்வெனோசோரியாவில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீதான் மிக மோசமாகப் பரவி வருகிறது. அந்தப் பகுதியிலிருந்து வெளியாகும் புகை செயற்கைக்கோள் படங்களில் தெரியும் அளவுக்கு அங்கு தீ பரவல் தீவிரமாக உள்ளது.

காட்டுத் தீயை அணைக்கும் பணிகளில் உதவுவதற்காக, கிரீஸுக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஹெலிகொப்டர்களை அனுப்பியுள்ளது. இதனிடையே, இத்தாலிய தீவான சார்டினாவில் வெப்பநிலை 114.8 பாகை செல்சியஸை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மற்றோர் ஐரோப்பிய நாடான ஸ்பெயினின் தெற்குப் பகுதியில் தொடர்ந்து வெப்ப அலை வீசுவதால் அங்கு செவ்வாய்க்கிழமை 111.2 பாகை செல்சியஸ் வெப்பம் பதிவானது என்று பி. பி. சி. தெரிவித்துள்ளது.

ஐரோப்பாவில் அண்மையில் வீசிய ‘சர்பரஸ்’ என்று பெயரிடப்பட்டுள்ள ‘எதிர்ப் புயல்’தான் காரணமாக அங்கு வெப்ப அலை வீசி வருகிறது. பொதுவாக, வளிமண்டலத்தில் ஏற்படும் குறைந்த அழுத்த மண்டலத்தை சுற்றிலும் காற்று வேகமாகச் சுழல்வதை புயல் என்கிறோம். அதுவே, உயர் அழுத்த மண்டலம் உருவாகி, அதைச் சுற்றிலும் காற்று மெதுவாக சுழல்வது ‘எதிர்ப் புயல்’ என்று கூறப்படுகிறது.

புயலின் மையப் பகுதி வேகமாக நகர்ந்து செல்லும். ஆனால், அதற்கு எதிரான தன்மை கொண்ட எதிர்ப் புயலின் மையப்புள்ளி மிக மிக மெதுவாக நகரும். சில பகுதிகளில் அது தற்காலிகமாக நிலைத்து கூட நின்றுவிடும். இந்தநேரங்களில் காற்றில் ஏற்கெனவே இருக்கும் வெப்பம் இன்னும் அதிகரித்து அந்தப் பகுதிகளில் அதீத வெப்பநிலை ஏற்படும். அதைத்தான் வெப்ப அலை என்கிறோம்.

தற்போது ஐரோப்பாவில் ‘சர்பரஸ்’ எதிர்ப் புயல் காரணமாக ஏற்பட்டுள்ள வெப்ப அலைக்கு ‘கேரன்’ என்று பெயரிடப்பட்டுள்ளது. இதிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக இத்தாலியின் 16 முக்கிய நகரங்களுக்கு அந்த நாட்டு அரசு சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 2003ஆம் ஆண்டில் வீசிய வெப்ப அலைக்கு ஐரோப்பாவில் 70 ஆயிரம் பேர் பலியாகினர்.

அதன்பிறகு அங்கு கடந்த ஆண்டு ஏற்பட்ட வெப்ப அலை காரணமாக 62,000 பேர் உயிரிழந்தனர்.

பொதுவாக, அதிக வெப்ப நிலையால் வயோதிபர்கள், உடல்நலக் குறைவு உள்ளவர்கள் போன்றோரின் உயிரிழப்பு அபாயம்தான் அதிகமாக இருக்கும். ஆனால், வெப்ப அலையால் ஆரோக்கியமான மனிதர்கள்கூட இறக்கும் அபாயம் அதிகம் என்று கூறப்படுகிறது.

# இலங்கையுடனான டெஸ்ட்; வெற்றிநோக்கி பாகிஸ்தான்

காலி, ஜூலை 20

இரண்டாவது இன்னிங்ஸில் 279 ஓட்டங்களுக்கு சுருண்டது இலங்கை அணி. பதிலுக்கு இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் பாகிஸ்தான் அணி வெற்றி பெறுவதற்கு இன்னமும் 83 ஓட்டங்கள் தேவை. அந்த அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 48 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.



இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. முதல் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 312 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் ஆடிய பாகிஸ்தான் அணி 461 ஓட்டங்களைக் குவித்தது.

நேற்றைய தினம் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப் பெடுத்தாடியது இலங்கை அணி. நிஷான் மதுஷ்க, திமுத் கருணாரத்ன தொடக்கம் கொடுத்தனர். திமுத் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார், பின்னர் வந்த குசல் மெண்டிஸ் 18, அஞ்சலோ மத்தியூஸ் 7, மதுஷ்க 52, தினேஷ் சந்திமால் 28 ஓட்டங்களைப் பெற்றனர்.

பின்னர் வந்தவர்களில் தனஞ்சய டி சில்வா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ரமேஷ் மெண்டிஸ் 42 ஓட்டங்களைக் குவித்தார். 83.1 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 279 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்க ளையும் இழந்தது.

பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சில் நோமன் அலி, அப்ரர் அஹமட் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும் சல்மான், ஷா அப்ரிடி ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

131 ஓட்டங்களை இலக்காக கொண்டு இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது பாகிஸ்தான் அணி. நேற் றைய நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தபோது 15 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்களை இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றது. பாகிஸ்தான் அணி.

இமாம் உல் ஹக் 25, பாபர் அஸாம் 6 ஓட்டங்களு டன் ஆட்டமிழக்காமல் உள்ளனர். பாகிஸ்தான் அணி யின் வெற்றிக்கு 7 விக்கெட்கள் கைவசம் உள்ள நிலையில் இன்னமும் 83 ஓட்டங்கள் தேவைப்படுகின்றன.

இலங்கையின் பந்துவீச்சில் பிரபாத ஜெயசூர்யா 2 விக்கெட்களை கைப்பற்றினார்.

இன்று போட்டியின் ஐந்தாம் மற்றும் இறுதி நாளாகும். (ஐ)



# ஜோகோவிச்சுக்கு அபராதம் விதிப்பு

லண்டன், ஜூலை 20

சேர்பியாவின் நட்சத்திர வீரர் நோவக் ஜோகோவிச் விம்பிள்டன் ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் தோல்வியடைந்தார். அந்த கோபத்தில் தனது ரென்னிஸ் மட்டையை ஜோகோவிச் உடைத்தார். இந்த செயலுக்காக அவருக்கு 8 ஆயிரம் டொலர் அபராதம் விதித்துள்ளது விம்பிள்டன் டென்னிஸ் நிர்வாகம்.

8,000 டொலர் அபராதம் என்பது தனியொரு ரென்னிஸ் விளையாட்டு வீரருக்கு விதிக்கப்படும் பெருந்தொகை என்றே கூறப்படுகிறது.

சுமார் 1.2 மில்லியன் பவுண்ஸ்களை பரிசாக வென்றுள்ள ஜோகோவிச், அது விரக்தியை ஏற்படுத்திய தருணம் எனவும், அல்கராஸ் அருமையான விளையாட்டை வெளிப்படுத்தினார் எனவும், வெற்றி பெற தகுதியான வீரர் அவர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பிபிசி ஒன் தொலைக்காட்சியில் சுமார் 11.3 மில்லியன் பேர் இறுதிப் போட்டியை கண்டுகளித்துள்ளனர். ரென்னிஸ் மட்டையை உடைத்தது மட்டுமின்றி, நடுவர் கடிந்துகொள்ளும் நிலைக்கும் ஜோகோவிச் தள்ளப்பட்டார். (ஐ)



# உலகக் கிண்ண தொடரில் பாகிஸ்தான் பங்கேற்குமா?

இஸ்லாமாபாத், ஜூலை 20

பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் பிலாவால் பூட்டோ தலைமையில் பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரிப் உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்து, இந்தியாவில் நடைபெறும் ஐ. சி. சி. உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி பங்கேற்பது குறித்த அனைத்து அம்சங்களையும் ஆராய்ந்து முடிவெடுக்க பணித்துள்ளார். இதில் பாதுகாப்பு உள்ளிட்ட அம்சங்களும் அடங்கும் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்த உயர்மட்டக் குழு இந்தியா-பாகிஸ்தான் ராஜீய உறவுகள் உட்பட அனைத்து விவகாரங்களையும் பரிசீலனை செய்து விளையாட்டையும் அரசியலையும் பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியம் உள்ளதா என்பதையும் இந்தியாவில் அரசியல் சூழ்நிலை பாகிஸ்தான் வீரர்கள், அதிகாரிகள், நிர்வாகிகள், ஊடகங்கள், பாகிஸ்தான் மக்கள் ஆகியோருக்கு பாதுகாப்பானது தானா போன்றவற்றையும் ஆராய்ந்து முடிவெடுக்க உள்ளது.

இந்தக் குழுவின் முடிவின் அடிப்படையில்தான் பாகிஸ்தான் அணி, இந்தியாவுக்கு வந்து உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்குமா என்பதை பாகிஸ்தான் பிரதமர் தீர்மானிப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 98.5 ஓட்டங்கள் சராசரியை எட்டிய பாகிஸ்தானின் சகீல்

காலி, ஜூலை 20

டெஸ்ட் கிரிக்கெட்டின் பிதாமகன் என்று கருதப்படும் அவுஸ்திரேலியாவின் டொன் பிராட்மனின் சராசரி 99.99. இதை இதுவரை யாரும் கடக்க முடியவில்லை. இந்த சராசரிக்கு அருகில் வந்துள்ளார் பாகிஸ்தானின் நடுவரிசை துடுப்பாட்ட வீரர் சௌத் சகீல்.

இலங்கைக்கு எதிரான போட்டியில் நேற்று முன்தினம் இவர் 208 ஓட்டங்களை குவித்தார். இதன் மூலம் அவரது சராசரி 98.5ஆக உயர்ந்து தொன் பிராட்மனை நெருங்குவதோடு, இலங்கை மண்ணில் இரட்டைச் சதம் விளாசிய முதல் பாகிஸ்தான் வீரர் என்ற சாதனையையும் நிகழ்த்தினார்.

இடது கை வீரரான சௌத் சகீலின் வயது 27. இவர் கராச்சியில் பிறந்தவர். தன் 6ஆவது டெஸ்ட் போட்டியில் ஆடும் அவர் அணியின் துடுப்பாட்ட வரிசையில் 5ஆம் நிலை வீரராக இறங்கினார். அப்போது பாகிஸ்தான் அணி 5 விக்கெட்கள் இழப்பிற்கு 101 ஓட்டங்கள் என தட்டுத்தடுமாறி கொண்டிருந்தது. இவர் இறங்கி 19 பௌண்ட்ரிகளுடன் 361 பந்துகளில் 208 ஓட்டங்கள் எடுத்து கடைசி வரையில் வீழ்த்த முடியாமல் இருந்தார்.

இதற்கு முன்னர் 5 டெஸ்ட் போட்டிகளில் 72.50 என்ற சராசரியில் இருந்த ஷகீல், இந்தச் சாதனை இரட்டைச் சதத்தை அடுத்து 98.5 என்ற சராசரியை எட்டினார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் இதுவரை அவர், 37, 76, 63, 94, 23, 53, 22, 55* (ஆட்டமிழக்காமல்), 125*, 32, 208*. ஆனால், மற்றொன்றையும் குறிப்பிட்டாக வேண்டும் இப்போதுதான் பாகிஸ்தானுக்கு வெளியே



ஆடிச் சதம் எடுத்துள்ளார். அதுவும் இரட்டை சதமாக அமைந்தது.

இதற்கு முன்னர் இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கு எதிராக சொந்த மண்ணில் ஆடித்தான் இந்த ரன்களை எடுத்துள்ளார். மேலதிக சவால் என்னவென்றால் இவர் தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, நியூஸிலாந்து, அவுஸ்திரேலியா நாட்டு ஆடுகலங்களில் ஆடும்போதுதான் உண்மையான திறமை தெரியவரும்.

இப்போது 6 டெஸ்ட் போட்டிகளில் 788 ஓட்டங்களைக் குவித்து 98.50 என்ற சராசரியில் உள்ளார். முகமது ஹபீஸ்தான் இலங்கையில் அதிக ஓட்டங்கள் எடுத்த பாகிஸ்தான் வீரராக இருந்தார். ஹபீஸ் கொழும்பு டெஸ்ட் போட்டியில் 2012ஆம் ஆண்டில் 196 ஓட்டங்கள் எடுத்த சாதனையை இப்போது சகீல் தகர்த்துள்ளார்.

# இந்தியாவுடனான டெஸ்ட் மேற்கிந்திய அணி அறிவிப்பு

ஜமைக்கா, ஜூலை 20

இந்தியாவுடனான டெஸ்ட் தொடரின் 2ஆவது போட்டியில் மோதுவதற்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல் போட்டிக்கான அணியில் இருந்த வீரர்களில், துடுப்பாட்ட சகலதுறை வீரரான ரேமன் ரீபருக்குப் பதிலாக, பந்துவீச்சு சகலது வீரர் கெவின் சின்கிளேர் சேர்க்கப்பட்டுள்ளார்.

வேறு எந்த மாற்றமும் அணியில் மேற்கொள்ளப்படவில்லை. 7 ஒருநாள், 6 இருபது - 20 போட்டிகளில் விளையாடியிருக்கும் சுழல் பந்து வீச்சாளராக சின்கிளேர் இதுவரை டெஸ்ட் கிரிக்கெட்டில் களம் காணவில்லை.

2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் இந்தியா இன்னிங்ஸ் வெற்றி கண்டுள்ளது. போர்ட் ஒவ் ஸ்பெயினில் வியாழக்கிழமை தொடங்கும் 2ஆவது போட்டி, இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் மோதும் 100ஆவது டெஸ்ட் என்பது குறிப்பிடத் தக்கது.

**அணி விவரம்:**

கிரெய்க் பிரத்வெயிட் (அணித்தலைவர்), ஜெர்மெய்ன் பிளாக்வுட் (உப தலைவர்), அலிக் அதனாஸ், தேஜ்நரினைர் சந்தர்போல், ரகீம் கார்ன்வால், ஜோஷூவா டா சில்வா, ஷானன் கேப்ரியல், ஜேசன் ஹோல்டர், அல்ஜாரி ஜோசஃப், கிர்க் மெக்கன்ஸி, கெவின் சின்கிளோர், கெமார் ரோச், ஜோமெல் வாரிக்கன். (ஐ)



# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 14 கஸ்தூரியார் வீதி 1ம் ஒழுங்கையில் ஆதன இலக்கம் 22 எனும் ஆதனம் முத்துவேல் செட்டியார் பெண் பார்வதிஆச்சி என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை 1972 ஆம் ஆண்டு சின்னத்துரை சிறிதரன் பெண் கௌரிதேவிக்கு சீதனமளிக்கப்பட்டு பின்னர் அவரது மகன் சிறிதரன் அகிலனுக்கு 1994 ஆம் ஆண்டு நன்கொடையளிக்கப்பட்டது. யுத்த சூழ்நிலை காரணமாக அனைத்து ஆவணங்களும் தொலைந்து விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை சிறிதரன் அகிலன் அவர்கள் 21.07.2022 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமிடியஸ் முகதாவில் 2914ம் இலக்க நிபந்தனை அறுதி மூலம் நிலப்பரப்பு 01 குளி 9.41 விஸ்தீரண ஆதனத்தை பெருமாள்தேவன் திருச்செல்வன் என்பவரிற்கு வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை பெருமாள்தேவன் திருச்செல்வன் அவர்கள் 16.08.2022 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமிடியஸ் முகதாவில் 2933ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி மூலம் சிறிதரன் அகிலனுக்கு வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனம் சிறிதரன் அகிலன் அவர்கள் 21.07.2022 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமிடியஸ் முகதாவில் 2938ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை மூலம் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் P.புஸ்பராஜா அவர்களால் 18.08.2022 ஆம் திகதியிட்டு வரைந்த 8677P நிலஅளவைப்படத்தில் துண்டு 02 எனக் குறிப்பிடப்பட்ட நிலப்பரப்பு 00 குளி 9.15 பெருமாள் தேவன் கைம் பெண் முனீஸ்வரிக்கு வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார் பண்ணைக் கோவில்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை பிரதேச செயலாளர் பிரிவு:யாழ்ப்பாணம் கிராம சேவையாளர் பிரிவு: J/80 யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட கே.கே.வீதியின் 458 ம் வரிமதிப்பீட்டு இலக்கமும், கஸ்தூரியார் வீதியில் 22 ம் வரிமதிப்பீட்டு இலக்கமும் கொண்ட

"புன்னன்தறையும் பறையறியான் காடும் நொச்சிப்பள்ளமும்". நிலப்பரப்பு (01) ஒன்று குளி (9.41)ஒன்பது தசம் நான்கு ஒன்று. இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் P.புஸ்பராஜா அவர்களால் 2022.08.18ந் திகதி அளந்து வரைந்த 8677P ம் இலக்க படத்தில் துண்டுகள் 1,2 எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் துண்டு 2 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு (00) பூச்சியம் குளி(9.15) ஒன்பது தசம் ஒன்று ஐந்து.

இந்த நிலப்பரப்பு (00) பூச்சியம் குளி(9.15)ஒன்பது தசம் ஒன்று ஐந்துக்கும் எல்லை
கிழக்கு:தனியார் ஒழுங்கை
வடக்கு: நாகலிங்கம் செட்டியாரின் ஆதனம்.
மேற்கு: குறித்த படத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்ட சிறிதரன் அகிலனின் ஆதனம்.
தெற்கு: கஸ்தூரியார் வீதி 1ம் ஒழுங்கை

இதலடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது பெருமாள் தேவன் கைம் பெண் முனீஸ்வரிஇவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பெருமாள் தேவன் கைம் பெண் முனீஸ்வரி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 14 காங்கேசன் துறை வீதி ஆதன இலக்கம் 458 எனும் ஆதனம் முத்துவேல் செட்டியார் பெண் பார்வதிஆச்சி என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை 1972 ஆம் ஆண்டு சின்னத்துரை சிறிதரன் பெண் கௌரிதேவிக்கு சீதனமளிக்கப்பட்டு பின்னர் அவரது மகன் சிறிதரன் அகிலனுக்கு 1994 ஆம் ஆண்டு நன்கொடையளிக்கப்பட்டது. யுத்த சூழ்நிலை காரணமாக அனைத்து ஆவணங்களும் தொலைந்து விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை சிறிதரன் அகிலன் அவர்கள் 21.07.2022 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமிடியஸ் முகதாவில் 2914ம் இலக்க நிபந்தனை அறுதி மூலம் நிலப்பரப்பு 01 குளி 9.41 விஸ்தீரண ஆதனத்தை பெருமாள்தேவன் திருச்செல்வன் என்பவரிற்கு வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை பெருமாள்தேவன் திருச்செல்வன் அவர்கள் 16.08.2022ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமிடியஸ் முகதாவில் 2933ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி மூலம் சிறிதரன் அகிலனுக்கு வழங்கியுள்ளார். இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் P.புஸ்பராஜா அவர்களால் 18.08.2022 ஆம் திகதியிட்டு வரைந்த 8462P நிலஅளவைப்படத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்ட நிலப்பரப்பு 01 குளி 9.41

இதில் 2938 ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நிலப்பரப்பு (00) பூச்சியம் குளி(9.15) ஒன்பது தசம் ஒன்று ஐந்து வழங்கப்பட்டது போக மிகுதி நிலப்பரப்பு 01 குளி 0.26. இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் P.புஸ்பராஜா அவர்களால் 2022.08.18ந் திகதி அளந்து வரைந்த 8677P ம் இலக்க படத்தில் துண்டுகள் 1,2 எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ளது.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார் பண்ணைக் கோவில் பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை பிரதேச செயலாளர் பிரிவு: யாழ்ப்பாணம் கிராம சேவையாளர் பிரிவு: J/80 யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட கே.கே.வீதியின் 458ம் வரிமதிப்பீட்டு இலக்கமும், கஸ்தூரியார் வீதியில் 22 ம் வரிமதிப்பீட்டு இலக்கமும் கொண்ட

"புன்னன்தறையும் பறையறியான் காடும் நொச்சிப்பள்ளமும். நிலப்பரப்பு (01)ஒன்று குளி (9.41) ஒன்பது தசம் நான்கு ஒன்று. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.புஸ்பராஜா அவர்களால் 2022.07.16ந் திகதி அளந்து வரைந்த 8462P ம் இலக்க படத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலப்பரப்பு 1 குளி 0.26 க்கும் எல்லைகள்
கிழக்கு:தனியார் ஒழுங்கை
வடக்கு: கனகசுந்தரம் முருகமூர்த்தியின் ஆதனமும் நாகலிங்கம் செட்டியாரின் வாரிசுகளின் ஆதனமும் மேற்கு: கே.கே.எஸ் வீதி
தெற்கு: கஸ்தூரியார் வீதி 1ம் ஒழுங்கை
இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது சிறிதரன் அகிலன் இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சிறிதரன் அகிலன் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -15, கோவில் வீதி, 393/41 என்ற ஆதன இலக்கத்தை என்ற பெயரில் யாழ் மாநகரசபை கொண்ட ஆதனம் பாலசிங்கம் பெண் சத்தியபாலதேவி ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுகின்ற ஆதனத்தின் சொரியலான அரைவாசியினை சுப்பிரமணியம் அருணகிரிநாதனும் பெண் விமலா அருணகிரி நாதனும் பிரசித்த நொத்தாரிசு டே.இராஜதுரை முகதாவில் 01.09.1985ம் திகதியன்று 5466ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் பாலசிங்கம் பெண் சத்தியபாலதேவி என்பவருக்கு அறுதி விற்றிருந்தார்.

மிகுதி சொரியலான அரைவாசி உள்ளிட்ட முழு ஆதனத்தின் மீதான உரித்து சாதனத்தினை தற்போது No 120, Town Haven Place 508, SCARBOROUGH, ONTARRIO, MIK 5H6, CANADA வில் வசிக்கும் நாகரட்ணம் பாலசிங்கம் மற்றும் பெண் சத்தியபாலதேவி ஆகியோர் தமது அற்றோனித்தத்துவக்காரரான நாகரட்ணம் கமலாதேவி ஊடாக தோன்றி பிரசித்த நொத்தாரிசு தி.கணதீபன் முகதாவில் 01.11.2019 ம் திககியன்று 1665 ம் இலக்கத்தில் நிறைவேறிய உரித்துப்பிரகடனமும் ஆட்சிப்பிரகடனமும் என்ற உறுதியில் இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுகின்ற முழுமையான ஆதனத்திற்கும் தாமே சொந்தக்காரர்கள் என வெளிப்படுத்தியுள்ளார்கள்

பின்னர் இவ் ஆதனத்தை No 120, Town Haven Place 508, SCARBOROUGH, ONTARRIO, MIK 5H6, CANADA வில் வசிக்கும் நாகரட்ணம் பாலசிங்கம் மற்றும் பெண் சத்தியபாலதேவி ஆகியோர் தமது அற்றோனித்தத்துவக்காரரான நாகரட்ணம் கமலாதேவி ஊடாக தோன்றி 29.12.2019ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தி.கணதீபன் முகதாவில் 1687 ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதி மூலம் பாலசிங்கம் சிவபாலன் என்பவருக்கு அறுதி விற்றிருந்தார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை

மூலிச்சந்தன் வெளி நிலப்பரப்பு இரண்டு குளிகள் பதினேழுடன் மூன்றின் கீழ் எட்டு (நில 2 குளிகள் 17 3/8)

இதன் எல்லைகள்.
கிழக்கு :- வீதி
வடக்கு :- ஆறுமுகம் மாணிக்கத்திற்கு சொந்தமான ஆதனம்.
மேற்கு :- முத்துக்குமாரு தியாகேசம்பிள்ளை பெண் இராதாவின் ஆதனம்
தெற்கு :- ஒழுங்கை

இதிலுள்ள கல்வீடும் கிணறும் மலசலகூடமும் வான் பயிர் செய் பயிர்கள் உள்ளடங்கலாக இதடங்கலனைத்தும்

தற்போது பாலசிங்கம் சிவபாலன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/ முழுமையாகவோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலி ருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பாலசிங்கம் சிவபாலன் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளியல்ல என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -26 (பழைய வட்டாரம் 01) 3 ம் குறுக்குத்தெரு, ஆதன இல 37 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் தையல்நாயகி கதிரவேலு என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் முத்துத்தம்பி சின்னத்துரையும் பெண் அன்னலட்சுமியும் 20.05.1960 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு S.செல்வராஜா முகதாவில் 1167 ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் வைத்தியநாதர் பொன்னையாபிள்ளை கைம்பெண் சிவகாமிப்பிள்ளை வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை 29.12.2002 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு S.பரமராஜா முகதாவில் 2646 ம் இலக்க உறுதி மூலம் கதிரவேலு பசுபதிப்பிள்ளை சிவகுமாரன், கதிரவேலு அன்ரன் கங்ககுமாரன் ஆகியவர்கள் எங்களது காலஞ்சென்ற மாதாவின் தாயாராகிய வைத்தியநாதர் பொன்னையாபிள்ளை கைம்பெண் சிவகாமிப்பிள்ளை 1960 ம் ஆண்டு வைகாசி மாதம் 20 ம் திகதி நொத்தாரிஸ் ச.செல்வராசா முகதாவில் 1167 ம் இலக்கத்தில் முடிந்த அறுதி உறுதி மூலம் சிவகாமிப்பிள்ளை ஆண்டு அனுபவித்து பின்னர் தனது மகளாகிய கதிரவேலு பெண் தையல்நாயகி ஆகிய இவரை தனது ஏகவாரிசாக விட்டு தையல்நாயகி மரணசாதனம் இன்றி இறந்தமையாலும் கதிரவேலு பெண் குறித்த ஆதனத்தின் சொந்தக்காரராக குறித்த ஆதனத்தை ஆண்டு அனுபவித்து மரணசாதனம் இன்றி இறந்தமையால் தங்களை வந்தடைவதாக வெளிப்படுத்தியுள்ளார்கள்

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று யாழ் நகரின் மூன்றாம் பிரிவு இறை வரி மதிப்பீட்டு இலக்கம் மூன்றாம் குறுக்குத்தெரு 62 தற்போது 37 நிலஅளவையாளர் ப.சண்முகலிங்கம் 12.08.1938 இல் தயாரித்த 1003 இலக்கப்படத்தின் படி அடையாளமிடப்பட்ட துண்டு நில.பர.2 குளி 8 கல்வீடும் கிணறு இதற்கு எல்லை

கிழக்கு: 3 ம் குறுக்குத்தெரு
வடக்கு: சேவியர் பெண் றெஜினாவின் ஆதனம்
மேற்கு: டாக்டர் விசுவலிங்கத்தின் ஆதனம்
தெற்கு: றொபேர்ட் நெவின்ஸின் ஆதனம் இதடங்கலும். இதைச்சேர்ந்தவைகளும்

தற்போது கதிரவேலு பசுபதிப்பிள்ளை சிவகுமாரன், கதிரவேலு அன்ரன் கங்ககுமாரன் இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களு டன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது கதிரவேலு பசுபதிப்பிள்ளை சிவகுமாரன், கதிரவேலு அன்ரன் கங்காகுமரன் என்னும் பெயரிற்குமாற்றம் செய்யநடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தரு கின்றேன்.

**ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

## பிரத்தியேக...

தகவலைத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது, வெள்ளி, ஞாயிறு தினங்களில் வகுப்புகளை நிறுத்த ஒத்துழைப்பு வழங்குகிறோம். ஞாயிற்றுக்கிழமைகளில் மதியத்துக்கு பின்னர் வகுப்புகளை நடத்த அனுமதிக்குமாறு கோரப்பட்டது. அத்துடன், சாதாரண தர பரீட்சைக்கான தயார்ப்படுத்தல் தரம் 9இல் ஆரம்பிப்பதால் இந்த திட்டத்தால் அந்த மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்று தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் சுட்டிக்காட்டினர். மேலும், தாங்கள் வகுப்புகளை நிறுத்திய நிலையில் பிரத்தியேக வகுப்புகள் நடைபெறுகின்றன என்றும் முறையிட்டனர்.

வாரத்தின் ஏழு நாட்களும் தொடர்ச்சியாக கற்றலில் ஈடுபடுவதால் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் உளப்பாதிப்பை குறைக்கவும் அறநெறிக் கல்வியை ஊக்குவிக்கவுமே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன், விதிமுறைக்கு கட்டுப்படாமல் பிரத்தியேக வகுப்புகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரச அதிபர் இதன்போது உறுதியளித்தார். (ஐ-03)

## அதிகரித்த...

நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தை அல்லது வடக்கு மாகாணத்தை பொறுத்தவரை மூளை சம்பந்தமாக ஏற்படும் மூன்று நோய்கள் பற்றி நாங்கள் கருத்தில் எடுக்கவேண்டும்.

பக்கவாதம் என்பது பொதுவாக மக்களிடையே காணப்படுகின்றது. நடுத்தர அல்லது வயது கூடியவர்களிடம் காணப்படுகின்ற ஒரு பொதுவான நோயாக இது காணப்படுகின்றது.

யாழ்.போதனா மருத்துவமனைக்கு ஒரு நாளில் 6 தொடக்கம் 7 நோயாளர்கள் சிகிச்சைக்காக கொண்டு வரப்படுகிறார்கள்.

இதேபோல வீதி விபத்துகளில் மூளை சிதைவுகள் மற்றும் ஏனைய காரணங்களால் இறப்புகூட ஏற்படுகின் றது. வீதி விபத்துகளால் இள வயதினர் அதிகளவில் பாதிக்கப்படுகின்றார்கள். தொற்றா நோய்களில் இருந்து மக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒருவருக்கு உயர் குருதி அமுக்கம் இருக்கின்றது என்பதை அறிந்தால் அவர் அவருடைய வாழ்நாள் பூராகவும் அதன் தாக்கம் உடம்பில் இருக்கும் என்பது தான் அர்த்தம். ஆகவே அவர் குறிப்பிட்ட மருந்தை அவர் உட்கொள்வதுடன் குறைந்தது 3 - 6 மாத இடைவெளியில் மருத்துவரை நாடி சோதனைக்கு உட்படுவதுடன், உரிய மாத்திரைகளை எடுப்பதன் மூலம் நரம்பியல் நோய்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

அதிகரித்த மது பாவனையால் வடக்கு மாகாணத்தில் நரம்பியல் சார்ந்த நோய்கள் ஏற்படுகின்றன. தற்போது வடக்கில் மதுபான பாவனை அதிகரித்துள்ளதாலேயே நரம்பியல் சார்ந்த நோய்கள் ஏற்படுகின்றன.

இதனால் இன்சுலின் உற்பத்தி தடைப்படுகின்றது மது பாவனையை தடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும். இதேபோல போதைப் பொருள் பாவனையும் நரம்பியல் சார் நோய்கள் அதிகரிப்புக்கு காரணமாகும்.

குறிப்பாக, இளையவர்கள் நரம்பியல் நோய்கள் மற்றும் திடீர் மாரடைப்பு, பக்கவாதம் போன்ற நோய்களுக்கு உள்ளாகின்றனர். எனவே அதிகரித்துள்ள மதுபாவனை, போதைபொருள் பாவனையால்அவர்கள் அறியாமலே அவர்களுக்கு மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. மது பாவனையை கட்டுப்படுத்த சமூக ஆர்வலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## ஊழல்...

இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் ஜூன் 21 மற்றும் ஜூலை 6 ஆகிய இரண்டு தினங்களிலும் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விரும்பிய...

கட்சிகளுடனான சந்திப்பு தொடர்பில் கருத்துவெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை இறைமையுள்ள நாடு. எமக்கென்று ஒரு ஜனாதிபதி உள்ளார். அரசாங்கம் உண்டு. பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி தலைமையிலான பாராளுமன்றமே முடிவு செய்யும் - என்றும் அமைச்சர் பந்துல சொன்னார். (ஐ)

## ராஜீவ்...

இதன் மூலம் 1956 முதல் சிங்களம் மட் டுமே ஆட்சி மொழி என்ற நியாய மற்ற நிலை மாறி தமிழும் ஆட்சி மொழி என்ற சம உரிமை பெற்றதுடன், இலங்கை தமிழர்களின் உரி மைகளுக்கு சட்டப் பாதுகாப்பு வழங்கப்பட்டது என்றும் கூறினார்.

மேலும், 13ஆவது திருத்தச் சட்டம் தான் இன்றைய இலங்கை தமிழர்களின் பாதுகாப்பு கவசமாக விளங்கி வருகிறது. ஆனால், அந்த சட்டத் திருத்தத்தை நிறைவேற்ற இலங்கை அரசு எந்த முயற்சியும் செய்யாமல் அதை சீர்குலைக்கிற முயற்சியில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

13ஆவது திருத்தத்தை செயல்படுத்துவதற்கு பதிலாக வளர்ச்சித் திட்டங்கள் அரசியல் அதிகாரப் பரவல் உள்ளிட்ட திட்டங்களை இலங்கை ஜனாதிபதி தமிழ் கட்சிகளுடனான கூட்டத்தில் முன்வைத்திருக்கிறார். இதன்மூலம் போகாத ஊருக்கு அவர் வழிகாட்டியிருக்கிறார்.

இலங்கை ஜனாதிபதி விக்கிரமசிங்க கோரிக்கையை தமிழ் கட்சிகள் நிராகரித்திருக்கின்றன. அத்துடன், பொலிஸ் அதிகாரம் இல்லாமல் 13ஆவது சட்டத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதும் இலங்கை அரசாங்கத்தின் திட்டமாக இருக்கிறது.

இலங்கை அரசு கடந்த காலத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பதை சுட்டிக்காட்டி இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும், சர்வதேச சமூகத்துக்கும் இரா. சம்பந்தன் கடிதம் எழுதியிருக்கிறார்.

நிலத்தை பறிப்பதுடன், பொலிஸ் அதிகாரத்தை பறிப்பதும் இலங்கை அரசின் நோக்கமாக இருக்கிறது. இதன் மூலம் மாகாணங்களுக்கு சுயாட்சியை வழங்க வழிவகையும் செய்யும் 13ஆவது சட்டத் திருத்தத்தை இலங்கை அரசு தொடர்ந்து முடக்கி வருவதையும் தமது கடிதத்தில் பிரதமர் மோடிக்கு சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே, 21 ஆம் திகதி (நாளை) இந்திய பிரதமரை சந்திக்க வருகிற இலங்கை இலங்கை ஜனாதிபதி விக்கிரமசிங்கவிடம் தங்கள் உரிமைகளை வலியுறுத்தி பாதுகாப்பு தர வேண்டுமென்று எம்.ஏ. சுமந்திரன் வலியுறுத்தியிருக்கிறார். எனவே இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களுக்கு அதிகாரம் வழங்கும் வகையில் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை தமிழர்களுக்காக போராடி பெறப்பட்ட 13ஆவது சட்டத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஏற்கனவே இந்தியாவுக்கு இலங்கை அரசு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான முயற்சியில் பிரதமர் நரேந்திர மோடி ஈடுபட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி பெற்றுத் தந்த உரிமைகள் பிரதமர் மோடி ஆட்சிக் காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக சிதைக்கப்பட்டு முடக்கப்பட்டு வருவதை பிரதமர் மோடி உணர்ந்து செயல்பட வேண்டும்." - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# குருந்தூரில் வன்முறையை தூண்டிய பொலிஸார் தண்டிக்கப்பட வேண்டும்

## கஜேந்திரன் எம். பி. வலியுறுத்து

வவுனியா, ஜூலை 20

குருந்தூர் மலையில் வன்முறையை தூண்டியமைக்காக பொலிஸார் தண்டிக்கப்பட வேண்டும் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குமுழமுனை பிரதேசம் என்பது தமிழர்களுடைய வரலாற்றுடன் தொடர்புடைய இடம். அங்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆதிசிவன் ஐயனார் ஆலயம் அமைந்துள்ளது. உடைந்த நிலையில் இருந்தாலும் தமிழர்கள் பல நூற்றாண்டுகளாக அங்கு வழிபாடுகளை மேற்கொண்டு வந்துள்ளார்கள்.

யுத்தத்துக்குப் பிற்பாடு ஒரு சில வருடங்களுக்கு முன்னர் அவ்விடத்தில் இருந்த ஆதி சிவன் ஐயனார் இனவாத வெறியர்களினால் அகற்றப்பட்டுள்ளது. உடைத்து எறியப்பட்டுள்ளது. இருந்தாலும் அந்த இடத்தில் தமிழ் மக்கள் வழிபாட்டில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில், கடந்த 14 ஆம் திகதியும் அந்த இடத்தில் பொங்கல் செய்து வழிபாடுகளை மேற்கொள்வதற்காக நூற்றுக் கணக்கான பொதுமக்கள் அந்த இடத்துக்கு சென்றிருந்தார்கள். நாங்களும் வழிபாடுகள் செய்ய சென்றிருந்தோம்.

அப்போது அங்கு தென்னிலங்கையில் இருந்து வருகை தந்த பௌத்த பிக்குகளும் சிங்கள இளைஞர்களும் வன்முறை மற்றும் அச்சுறுத்தலில் ஈடுபட்டனர். இந்த நேரத்தில் பொலிஸார் பௌத்த பிக்குளுக்கு ஆதரவாகவும், சிங்கள பௌத்த பேரினவாத கும்பலுக்கு சார்பாகவும் செயல்பட்டிருந்தார்களே தவிர, தமிழ் மக்கள் வழிபாடுகளை மேற்கொள்ள இடையூறு செய்தமைக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஒரு கட்டத்தில் நாங்கள் ஆலய பீடத்தில் ஏறி வணக்க நிகழ்வுகளை செய்ய முற்பட்ட போது பொலிஸார் தடை விதித்தார்கள். அந்த பீடத்துக்கு முன்பாக பொங்கல் செய்வதற்கு அடுப்பை பற்ற வைத்தபோது பொலிஸார் தடை விதித்து காலால் உதைந்து அந்த தீபம் அணைக்கப்பட்டது.

அந்த பீடத்துக்கு முன்பாக அமர்ந்து பஜனைகளை செய்ய முற்பட்டபோது பௌத்த பிக்குகள் ஆலய பீடத்தில் ஏறி பிரித் ஓதினார்கள். அப்போது எமது மக்களும் அந்த பீடத்தில் ஏறி வணக்க நிகழ்வுகளை செய்ய முற்பட்டபோது பொலிஸார் தமிழர்களை அந்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்தினார்கள். அப்போது சலசலப்பு நிலைமை தோன்றியது.

இதற்கு பிற்பாடு பௌத்த பிக்குகள் அந்த இடத்தில் இருந்து பொலிஸாரால் வெளியேற்றப்பட்டனர். இதனைத் தொடர்ந்து பொலிஸார் பலாத்காரமாக வழிபாட்டுக்கு வந்த தமிழ் மக்களையும் வெளியேற்றினர்.

இது எங்களின் வழிபாட்டு உரிமையை மறுக்கின்ற செயல். அடிப்படை உரிமையை மோசமாக மீறுகின்ற செயல். நாங்கள் மிக மோசமாக துன்புறுத்தல், அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளோம். குருந்தூர்மலையில் வன்முறையை தூண்டிய பொலிஸார் தண்டிக்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)

## ஜி.எஸ்.பி...

இழக்காது என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதித்துவ பணிமனை தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2022ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இலங்கை 320 கோடி யூரோ பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது என்றும் அந்தப் பணிமனை கூறியுள்ளது. (ஐ)

## ரணில்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்க் கட்சிகள் நடத்திய சந்திப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ, ஜே. வி. பி. தலைவரான அநுரகுமார திஸநாயக்க ஆகியோர் கருத்து வெளியிடும்போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

சஜித் பிரேமதாஸ கருத்துரைக்கையில்,

ராஜபக்ஷக்கள் போல ரணில் விக்கிரமசிங்கவும் தமிழர்களை ஏமாற்றியே தீருவார். அவரை நம்பி தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பேச்சுக்கு செல்வதால் எந்தப் பயனும் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில்தான் தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை - இந்த நாட்டின் மக்கள் ஒருமித்து விரும்பும் தீர்வை பெற முடியும். எனவே, ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியை நிறுவுவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் - என்றார்.

இதேபோன்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க கூறுகையில்,

தான் ரணில் ராஜபக்ஷ அல்ல ரணில் விக்கிரமசிங்கதான் என தமிழ் மக்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் கூறியது நகைப்புக்குரியது. தற்போது ரணில் - ராஜபக்ஷ அரசாங்கம்தான் ஆட்சியில் உள்ளது. ராஜபக்ஷக்கள் பட்டாளத்தின் ஆசியில்தான் ஜனாதிபதி கதிரையில் ரணில் விக்கிரமசிங்க இருக்கிறார். எனவே, ராஜபக்ஷக்களின் குணாதிசயங்கள் ரணிலிடம் உண்டு. அவரிடம் தமிழ் மக்கள் - அவர்களின் பிரதிநிதிகள் தீர்வை எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது - என்று கூறினார். (ஐ)

## 13ஐ...

சந்திப்பு தொடர்பாக அவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ராஜபக்ஷக்கள் எம்மை ஏமாற்றியது போன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எம்மை ஏமாற்றலாம் என்று தப்புக் கணக்கு போடுகிறார். இதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் தமிழர் நலனில் அதிக சிரத்தையுடன் செயல்படுகிறது என்பதை ரணில் விக்கிரமசிங்க உணர வேண்டும்.

ஜனாதிபதி இந்தியாவுக்கு செல்லும் முன்னர் நேற்று (நேற்று முன்தினம்) சந்திப்பை நடத்தியது எங்களை - சர்வதேசத்தை சமாளிப்பதற்கே. எனினும், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு வேண்டும் என்பதில் நாம் விடாப்பிடியாக நிற்கிறோம்.

முழுமையான அதிகாரப் பகிர்வுக்கு அனைத்துக் கட்சிகளும் இணங்கினால் தான் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தலாம் என்று ரணில் விக்கிரமசிங்க கூறும் காரணத்தை ஒருபோதும் ஏற்க முடியாது. அவர் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர். பாராளுமன்றத்தின் பெரும்பான்மை பலத்துடனேயே அவர் பதவியில் இருக்கிறார். எனவே, அவர் நினைத்தால் 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தி நாம் கோரும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்க முடியும்.

நாம் எமது நிலைப்பாட்டை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் மூலம் அனுப்பியுள்ளோம். புதுடில்லியில் ரணில் விக்கிரமசிங்க அவரை சந்திக்கும்போது, இந்தியப் பிரதமர் எமது நிலைப்பாட்டை வலியுறுத்துவார் என்று எதிர்பார்க்கிறோம் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தேசிய அடையாள அட்டை வழங்கும் ஒருநாள் சேவை வவுனியாவில் தேவை

## சார்ள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 20

**ஒருநாள் சேவை ஊடாக தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்கு கொழும்புக்கு வருகை தரும் வடக்கு மாகாண மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். ஆகவே, சிரமங்களுக்கு தீர்வாக வவுனியாவில் ஒருநாள் சேவை ஊடாக தேசிய அடையாள அட்டை விநியோகிக்கும் பிரிவு ஒன்றை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆரம்பிப்பாரா என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.**

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை சபை ஒத்திவைப்பு வேளைக்கான கேள்வி நேரத்தின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றியதாவது,

ஒருநாள் சேவை ஊடாக தேசிய அடையாள அட்டையை பெறுவதற்கு வடக்கு மாகாணத்தில் இருந்து 25 சதவீதமானோர் ஆட்பதிவு திணைக்களத்துக்கு வருகை தருகிறார்கள். பல சிரமங்களுக்கு மத்தியில் கொழும்புக்கு வந்து, அதிக பணத்தை செலவழித்து இவர்கள் ஒருநாள் சேவையை பெற்றுக்கொள்கிறார்கள்.

மக்கள் எதிர்க்கொள்ளும் சிரமங்களை நிவர்த்தி செய்ய வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டத்தில் ஆட்பதிவு திணைக்களத்தின் ஒருநாள் சேவை வழங்கல் மையத்தை அமைக்க முடியும். இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களை போல் அநுராதபுரம், பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் உள்ளவர்களும் பயனடைவார்கள்.

ஒருநாள் சேவை ஊடாக தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ள கொழும்புக்கு வரும் வடக்கு மாகாண மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டத்தில் தேசிய அடையாள அட்டை ஒருநாள் சேவை விநியோக பிரிவை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆரம்பிக்குமா? என்று கேட்டார். (ஐ)

# தரையிறங்கிய விமானத்தால் வீடுகள் சேதமடைந்தன!



கொழும்பு, ஜூலை 20

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தரையிறங்க வந்த விமானம் ஒன்று திடீரென மீண்டும் மேலே உயர்த்தப்பட்டதால் கீழிருந்த வீடுகள் மற்றும் சொத்துகளுக்கு சேதங்கள் ஏற்பட்டன.

சிங்கப்பூரில் இருந்து வந்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்குவதற்காக மிகவும் தாழ்வாக பறந்தது. இந்த நிலையில் திடீரென மேல் நோக்கி விமானத்தை விமானி செலுத்தியுள்ளார்.

இதையடுத்து ஏற்பட்ட பலத்த காற்று மற்றும் அதிர்வை விமானம் ஏற்படுத்தியது. இதனால், அந்தப் பகுதியிலிருந்த வீடுகளின் கூரைகள் பறந்தன.

நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கனடிய உயர்ஸ்தானிகர் ஆழியவளைக்கு வருகை



வடமராட்சி, ஜூலை 20

இலங்கைக்கான கனடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ் நேற்று புதன்கிழமை ஆழியவளைக்கு வருகை தந்தார்.

ஆழியவளையில் அமைந்துள்ள எஸ். கே. மாதிரி பண்ணையின் செயல்பாடுகள் மற்றும் தொழில்நுட்பங்கள் தொடர்பில் பார்வையிட்டார். இந்தப் பண்ணை அந்தக் கிராமத்தை சேர்ந்த பலருக்கு வேலைவாய்ப்பு வழங்கி, சர்வதேச தொழில் நுட்பங்களையும் உள்ளடக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்போது, குறித்த பண்ணை நிர்வாகி மற்றும் பணியாளர்களுடனும் உயர்ஸ்தானிகர் கலந்துரையாடினார். (ஐ-02)

# செயற்கைக் கடற்கரையை 3,000 பேர் பார்வையிட்டனர்

கொழும்பு, ஜூலை 20

கொழும்பு துறைமுக நகரில் உருவாக்கப்பட்டுள்ள செயற்கைக் கடற்கரையை திறந்துவைத்த முதல் இரண்டு நாட்களில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பார்வையிட்டுள்ளனர்.

இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது செயற்கை கடற்கரை இதுவாகும். இது கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பார்வையாளர்கள் கடற்கரையில் இலவசமாக மகிழலாம். துறைமுக நகர வளாகத்திற்குள் கட்டப்பட்ட நடை பாதையை பயன்படுத்துவதற்கான வாய்ப்பும் உள்ளது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உணவு வகைகளுடன் கூடிய உணவுக் கடைகளும் இப்பகுதியில் பொதுமக்களுக்கு திறக்கப்பட்டுள்ளன, மேலும் செயற்கை கடற்கரையில் நீச்சல் மற்றும் நீர் விளையாட்டுகளுக்கான வசதிகளும் உள்ளன. (ஐ)

# பெருந்தோட்ட மக்களுக்கு காணி; சஜித் ஏற்றதாலேயே கூட்டணி!

## மனோ கணேசன் எம். பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 20

நுவரெலியா முதல் கொழும்பு அவிசாவளை வரை நாடெங்கும் பரந்து வாழும் பெருந்தோட்ட மக்களுக்கு வீடு கட்டி வாழவும் பயிர் செய்கை வாழ்வாதாரத்துக்கும் காணி வழங்கி அவர்களை சிறு தோட்ட உரிமையாளராக்கும் எமது கொள்கையை சஜித் பிரேமதாஸ ஏற்றுக்கொண்டுள்ளார் என்று மனோ கணேசன் எம். பி. தெரிவித்துள்ளார்.

இதேபோல், கொழும்பு மாநகரில் சொந்த வீடு இல்லாமல் வாடகை வீடுகளில் வாழும் மக்களுக்கு தொடர்மனைகளை கட்டி சொந்தவீடுகள் வழங்கவும் சஜித் பிரேமதாஸ எம்முடன் ஒரு கட்சியாக, தேசிய கூட்டணியாக உடன்பாடு கண்டுள்ளார். தமிழ் முற்போக்கு கூட்டணி, சஜித் பிரேமதாச தலைமையில் ஐக்கிய மக்கள் கூட்டணியில் பிரதான பங்காளி கட்சியாக அங்கம் வகிக்க பிரதான காரணங்களில் இது ஒன்றாகும் - என்று அவர் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் பிரேமதாஸ இவை தொடர்பில் எமக்கு எழுத்து மூலமாகவும் வாய்மொழி மூலமாகவும் உறுதிகள் அளித்துள்ளார். பகிரங்கமாக மேடைகளில் கூறியுள்ளார். பாராளுமன்றத்தில் அதை இன்று மீண்டும் கூறி உறுதி செய்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் எதிர்கட்சி தலைவர் பிரேமதாஸவின் உரை தொடர்பிலேயே மனோ கணேசன் பாராளுமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# தேர்தல் குழுவுக்கு உறுப்பினர்களை நியமிக்காமல் விட்டது சதித் திட்டம்!

## தேர்தல் கண்காணிப்பாளர்கள் சாடல்

கொழும்பு, ஜூலை 20

சதித்திட்டத்தின் ஒரு பகுதியாகவே தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமிக்காமல் கால தாமதம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தேர்தல் கண்காணிப்பாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தேவைக்கேற்ப ஐந்து உறுப்பினர்களை ஆணைக்குழுவுக்கு நியமிப்பதை விட மூவரில் இருவரிடமிருந்து அனுமதியைப் பெற்று தேர்தல் தொடர்பான முக்கியமான முடிவுகளை எட்டுவது இலகுவானது என ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகளுக்கான நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசமைப்பு பேரவை ஸ்தாபிக்கப்பட்டுள்ள இவ்வேளையில் இவ்வாறானதொரு சதி இடம்பெறுவது கவலையளிக்கின்றது எனவும் கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் பின்னணியில் இவ்வாறான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாதென அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவின் அனைத்து உறுப்பினர்களும் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும் என சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கையின் (பவ்ரல்) நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமிப்பது அரசமைப்பு சபையின் பொறுப்பாகும் இதேவேளை ஆணைக்குழு சுயாதீனமாக செயல்படுவதை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அன்றாட நடவடிக்கைகள் மாத்திரமே தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விரைவில் அனைத்து உறுப்பினர்களும் நியமிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கிறோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ஹரின், மனுஷ ஆகியோர் நீக்கம்

கொழும்பு, ஜூலை 20

கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் போட்டியிட்டு, அமைச்சர்களாகப் பதவியேற்ற ஹரின் மற்றும் மனுஷ ஆகிய இருவரையும் கட்சியில் இருந்து நீக்கியுள்ளனர் என்று அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

ஹரின் பெர்னாண்டோ சுற்றுலா மற்றும் காணி அமைச்சராகவும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சராக மனுஷ நாணயக்காரவும் பதவியேற்றுக்கொண்டனர்.

இந்த இருவரையும் கட்சியில் இருந்து நீக்கியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. கட்சியின் செயல் குழு இந்த முடிவை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.